பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை11 ஞாயிற்றுக்கிழமை(26-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:297

## ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை முடிவு; ஹாட்லி, யாழ்.இந்து முன்னணியில்!

### பொதுவாகக் குடாநாட்டில் பெறுபேறுகள் இம்முறை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,நவ.26

2000 ஒகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

நேற்று முற்கொண்டு கிடைத்த முன்னணி யாழ்.பாடசாலைகளின் பெறுபேறுகளின்படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் யாழ்.இந்துக் கல்லூரியும் யாழ் குடாநாட்டில் முன்னிலை பெற்றுள்ளன.

ஹாட்லிக் கல்லூரியில் ஒன்பது பேரும் யாழ்.இந்துக் கல்லூரியில் ஏழு பேரும் மூன்று பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் தனுசன் (கணிதப்பிரிவு), விநாயகமூர்த்தி துஷ்யந்தன்(உயிரியல் பிரிவு) ஆகிய இருவரும் மாகாண மட்டத்தில் முன்னணிப் பெறுபேறு பெற்றுள்ளனர்.

இந்தப் பரீட்சை கடந்த முறை புதிய, பழைய பாடத்திட்டங்களின் கீழ் இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது. புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களுக்கும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களுக்கும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

எனினும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்களில் இருந்து முற்கொண்டு உதயனுக்குக் கிடைத்த தகவல்கள் இரு பாடத்திட்டத்தின் கீழ் தோற்றிய மாணவர்களினதும் பெறுபேறுகளைத் தனித்தனியாகப் பிரிக்காமல் சேர்ந்தே அமைந்திருந்தன.

அதன்படி முன்னணிப் பாடசாலைகளில் மூன்று மற்றும் மூன்றுக்கும் அதிகமான பாடங்களில் விசேட சித்தி (A) பெற்ற மாணவர்களின் விவரமும் எண்ணிக்கையும் வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சுக்கான சுமுக நிலையை ஏற்படுத்த

## அரசு – புலிகள் விரைவில் கைதிகள் பரிமாற்றம்?

கொழும்பு,நவ.26

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுக்கான சுமுக நிலையை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இரு தரப்பும் பரஸ்பரம் கைதிகளைப் பரிமாற்றிக் கொள்ளக் கூடும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருதரப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவர இணைந்து செயற்பட்டு வரும் மேற்குலக நாடுகள் கைதிகள் பரிமாற்றம் உட்பட சுமுக நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பரஸ்பரம் ஈடுபடுமாறு இரு தரப்பிடமும் வலியுறுத்தியுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மிக விரைவில் கைதிகள் பரிமாற்றத்தில் இரு தரப்பும் ஈடுபடக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் நோக்குடன் சர்வதேச ரீதியில் பலம் வாய்ந்த நான்கு நாடுகள் ஓரணியில் நின்று அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருவதாகவும் இராஜதந்திர வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இது விடயத்தில் அக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினம் மற்றும் மாவீரர் நாள் என்பவற்றை ஒட்டி குடாநாட்டின் சில இடங்களில் நேற்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தலைவர் பிரபாகரனுக்கு வாழ்த்துத் தெரிவித்து அவரது படத்துடன் கூடிய சுவரொட்டிகள் ஆனைக்கோட்டைப் பகுதியில் காணப்பட்டன.

யாழ்.நகரப் பகுதி உட்பட சில இடங்களில் மாவீரர் தின துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் 46ஆவது பிறந்த தினம் இன்றாகும். (ஐ-7-139)

### ஒரு கிலோமீற்றர் நீள சமாதானப் பதாகை

கொழும்பு,நவ.26

நாட்டில் தொடரும் யுத்தத்துக்கும் வன்முறைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஒரு கிலோ மீற்றர் நீளமான சமாதானப் பதாகை ஒன்றை கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் தொங்கவிடுவதற்கு மக்கள் சமாதான முன்னணி என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 11ஆம் திகதி இந்த சமாதானப் பதாகை விகாரமாதேவி பூங்காவைச் சுற்றிக் கட்டப்படும்.(ம-4)

### ரணில் இந்தியா பயணம்

கொழும்பு,நவ.26

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு வாரகால விஜயமாக நேற்று முன்தினம் இந்தியாவுக்குப் பயணமானார்.

அவருடன் ஐ.தே.கட்சி தூதுக் குழு ஒன்றும் உடன் சென்றுள்ளது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் ரணில் பேச்சு நடத்துவார் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

### தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,நவ26

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 1,500 தமிழ் மொழிமூல தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவுடன் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இயல்பு நிலையை ஏற்படுத்தினால் நேரடிப் பேச்சுக்கு புலிகள் தயார்!

## தமிழ்ச்செல்வன் பேட்டி



லண்டன்,நவம்பர்26

**"மோதல்களை நிறுத்தி, தமிழர் தாயகம் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கி, இயல்புநிலையை அரசு ஏற்படுத்துமானால் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேரடிப் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கின்றோம்."**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

தனிப்பட்ட செய்தியாளர் ஒருவர் லண்டன் மூலமாக வன்னியுடன் தொடர்பு கொண்டு சு.ப.தமிழ்ச்செல்வனிடமிருந்து பெற்றுக் கொண்ட பேட்டியை, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று அவரிடமிருந்து பெற்று இன்று பிரத்தியேகமாகப் பிரசுரிக்கின்றது.

அந்தப் பேட்டியிலேயே தமிழ்ச்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் அதி தீவிர பாதுகாப்பு

## 10 ஆயிரம் படையினர் சிவில் உடையில் காவல்!

கொழும்பு,நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை ஒட்டி கொழும்பு உட்பட நாட்டின் முக்கிய நகரங்களில் அதிஉச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலீஸார் உட்பட 10 ஆயிரம் படையினர் சிவில் உடையில் தீவிர காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவு ஆகிய பொலீஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலீஸாரும் சிவில் உடையில் நகரின் முக்கிய சந்திகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில்

## மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பம்

வவுனியா,நவ.26

மாவீரர் வாரத்தின் எழுச்சிநாள் நிகழ்வுகள் வன்னியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பொது இடங்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன -

அஞ்சலி நிகழ்வுகளில் பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர் என்றும் -

நாளை திங்கட்கிழமை மாலை 5.45(புதிய நேரம் 6.15)மணிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மாவீரர்தின உரையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா முடித்த' கப்பல் மூலம் செவ்வாயன்று பயணிகள் சேவை!

### நாளை ரிக்கெட் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் சேவையில் 'லங்கா முடித்த' கப்பல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஈடுபடவுள்ளது. இந்தச் சேவையில் ஆயிரத்து 250 பயணிகள் அழைத்துச் செல்லப்பட உள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் சேவைக்கான பயணச் சீட்டுக்கள் நாளை திங்கட்கிழமை யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக 'றான்'அதிகாரி எஸ்.சுகராஜன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள், வெளிமாவட்டங்களில் இருந்து வந்து திரும்பிச் செல்வோர், அரச அலுவலர்கள் மற்றும் நோயாளர்களுக்கு பயணச்சீட்டு விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளை ஒரு தொகுதி பயணச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் என்றும்-

(12ஆம் பக்கம் பார்க்க)

## குற்றம் புரிந்த 15 பேருக்கு பிரபா பொது மன்னிப்பு!

### மாவீரர் தினத்தை ஒட்டி

வவுனியா,நவ.26

பல்வேறு குற்றச்செயல்கள் புரிந்தமைக்காக வன்னியில் புலிகளின் நீதிமன்றத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைககப்பட்டிருந்த 15 பேருக்கு மாவீரர் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தகவல் வெளியிட்டது. (ஐ-7)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(25-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 968,360**

# தேவை

நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் பதவிக்கு ஒரு பெண் ஊழியரிடமிருந்தும், அலுவலக உதவியாளர் பதவிக்கு ஓர் ஆண் ஊழியரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்காளர் தகைமைகள்:-**

1) A/L சித்தியடைந்திருத்தல் (வர்த்தக மாணவர்களுக்கு முன்னுரிமை)

2) 25-30 இடைப்பட்ட வயது.

அலுவலக உதவியாளர்:- 20 வயதுக்கு உட்பட்டவர்

**விண்ணப்ப முடிவு திகதி:- 05-12-2000**

*தொடர்பு:-* விளம்பர இல. 1147,
மே/பா உதயன்.

(80895)


# வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 29 - 03 - 1965



உதிர்வு 06 - 10 - 2000

## அமரர் ஆறுமுகம் முருகேசு

(அங்காடி வியாபாரி)

*பாசத்தோடு எம்மை அரவணைத்து பாசத்துடன் எம்மை வளர்த்து கல்வி யூட்டி வாழ்க்கைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் மறைவை அறிந்து அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலியை பத்திரிகை மூலமாகவும் பிரசுரங்களை கண்ணீர் பூக்களாகவும் பிரசுரித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி வழங்கிய சகல அங்காடி வர்த்தக வியாபாரிகளுக்கும் இறுதிக் கிரியைகளில் முன்னின்று உதவிய அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் இருப்பிடத்தில் இன்று (26.11.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*195,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(80893)

மனைவி,பிள்ளைகள்,
திருமதி முருகேஸ் நிறஞ்சனா
குடும்பம்.

## அரியாலை, தனங்களப்பில் தாக்குதல்

அரியாலை, தனங்களப்புப் பகுதிகளில் இனங்காணப்பட்ட விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானப் படை விமானங்கள் நேற்றுமுன்தினம் குண்டுவீச்சினை மேற்கொண்டன என்று அரச தரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து இதுவரை எதுவும் தெரியவரவில்லை என்று அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

## சிவதாசன் எம்.பியாக பதவி ஏற்பு

கொழும்பு,நவ.26

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினராக எஸ்.சிவதாசன் சபாநயகர் அனுரா பண்டாரநாயக்கா முன்பாக நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா மதனராஜன் பதவி விலகியதை அடுத்தே அவரது இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)


**லஷ்மி** இணுவில்

அர்ஜூன்,ரம்பா,
நடித்த
**சுதந்திரம்**
இன்று மட்டும்
காட்சிகள் - 10.30, 2.30 (பி.நே.)
27.11.2000 ஆம் திகதி முதல்
*அலைபாயுதே*
(80900)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன்,ரோஜா,
ரம்பா,ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(ரீலீஸ்) காட்சிகள் - 11.00, 2.30 (பு.நே.)
(80898)

**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
*துள்ளாத மனமும் துள்ளும்*
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
(C13648)



# தகவல் தரவும்

55668798 இலக்கமுடைய பெண்கள் LUMALA சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுவிட்டது. இது பற்றி விவரம் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T. பாலகுமார்
271/3 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

(80902)


# யா/யூனியன் கல்லூரி வணிக மாணவர் மன்ற

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு :- 3626
2 ஆம் பரிசு :- 4129
3 ஆம் பரிசு :- 2387

ஆறுதல் பரிசில்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2714 | 1872 | 2228 | 397 | 3601 |
| 1978 | 1879 | 2957 | 1510 | 3457 |

**குறிப்பு:-** 08-12-2000ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலையில், பாடசாலை நேரத்தில் அதிர்ஷ்டலாபச் சீட்டுடன் வந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(80901) வணிக மாணவர் மன்றம்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 - 05 - 1930



மறைவு 28 - 10 - 2000

அமரர்

## தம்பிஐயா கிருபரட்ணம்

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் தலைவனாய்
எங்கள் உயர்வுக்காய் வழிகாட்டிய அன்புருவே!
என்றும் எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு

28.10.2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு -

நாளை (27.11.2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக் கின்றோம்.

*காங்கேசன் பேக்ஹவுஸ்,*
*K.K.S. வீதி,*
*மல்லாகம்.*
(80896)

தலைவரின் பிரிவால் துயருறும்
**- குடும்பத்தினர்.**

# ஐந்தாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



அமரர்

## கனகசபை சண்முகசுந்தரம்

(உரிமையாளர், சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்)

உதயம்
**03-11-1941**



அமரர்

## சண்முகசுந்தரம் சிவரூபன்

(மாணவன், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

உதயம்
**18-08-1983**

**அஸ்தமனம் : 23-11-1995**

திதி : 26-11-2000

எங்கள் குடும்பத்தலைவனை தனயனை காலம் கவர்ந்து
திங்கள் அறுபது உருண்டு மறைந்தது.
எங்கள் வாழ்வில் எத்துயர் வரினும்
உங்கள் நினைவென்றும் எம்மனதில் நிலைத்திருக்கும்.

- குடும்பத்தினர்.

***சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்,***
***70/1, மானிப்பாய் வீதி,***
***யாழ்ப்பாணம்.***

**T.P: 021-2763**

"துர்க்கா இல்லம்"
***இல: 11, ஓட்டுமடம் வீதி,***
***வண்ணார்பண்ணை,***
***யாழ்ப்பாணம்.***

(80821)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 03 - 1939



மறைவு 27 - 11 - 1999

## அமரர் தோமஸ் றிச்சேட்

அன்னாரின் நினைவுதினமாகிய நாளை (27-11-2000) திங்கட்கிழமை காலை திருநெல்வேலியிலுள்ள வேதாந்த மடத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி: யோகேஸ்வரி (ராசாத்தி)
பிள்ளைகள்: றாயன், றாயூ, யூட்டா, ரஜனி, றெனா - (பிரான்ஸ்)
மருமக்கள்: சாந்தி, யெஸ்மின், சிராணி, உசா, உதயன்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சு.விஜயகாந்தன்,
*குளங்கரை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

(80813)

# உதயன்

## செய்யாத் தவறுக்கு தண்டனையா?

உலகளாவிய ரீதியில் சுற்றுப்புறச் சூழலைப் பயமுறுத்தும் பெரும் எதிரியாக உருவெடுத்திருப்பது பூகோளத்தின் வெப்பநிலை அதிகரிப்பாகும். வெப்பநிலை அதிகரிப்பினால் காலநிலைகளில்பெரும் மாற்றங்களும் பாதிப்புகளும் உண்டாகின்றன.

வெப்பநிலை அதிகரிப்புக்கு பிரதான காரணம் ''கிறீன் ஹவுஸ்'' வாயுக்கள் எனப்படும் காபனீரொக்சைட், மீதேன், நைதரஸ் ஒக்ஸைட் போன்ற நச்சுவாயுக்கள் வளியை மாசுபடுத்துவதே ஆகும்.

இந்த வாயுக்கள் நிலக்கரி, எண்ணெய், வாயுக்கள் என்பனவற்றை எரிக்கும் போது வெளிப்பட்டு மிதமிஞ்சிய அளவில் வளியில் சேர்வதால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கிறது. இயற்கையை—சூழலை—பாதிக்கும் மிதமிஞ்சிய நச்சு வாயுக்களின் வெளியேற்றத்துக்கு முழுக்க முழுக்க கைத்தொழில் மய — ஐரோப்பிய —நாடுகளே காரணம.

எனினும் இயற்கையைச் சீண்டும் அவர்களின் வினையின் விளைவு அந்த நாடுகளை மட்டுமன்றி எல்லா நாடுகளையும் பாதிக்கும் — பாதிக்கிறது. வெப்பநிலை அதிகரிப்பினால் வெப்ப வலய நாடுகளில் நீர்வளம் மற்றும் விவசாயம் பாதிப்புறும் என்று அஞ்சப்படுகிறது. இதன் காரணமாக 2100 ஆம் ஆண்டளவில் இந் நாடுகளில் இப்போதுள்ளதை விட மேலும் ஐந்து கோடி மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவர் என மதிப்பிடப்படுகிறது. அது மட்டுமன்றி, மாலைதீவு, பங்களாதேஷ், சீனா, எகிப்து போன்ற நாடுகளில் பல பகுதிகள் கடலில் மூழ்குவதாலோ அல்லது கடல் அலை உயர்வதாலோ ஒரு கோடி மக்கள் பாதிப்படைவர்.

இத்தகைய பாதிப்புகளைத் தரும் வெப்பநிலை அதிகரிப்பு குறித்தும் சர்வதேச மட்டத்தில பல மாநாடுகள் நடைபெற்றன. இந்த மாதத்திலும் நெதர்லாந்தின் தலைநகர் ஹேய்க்கில் கடந்த ஒரு வாரமாக சர்வதேச மாநாடு நடைபெற்று முடிந்தது.

இந்த மாநாட்டில் வெப்பநிலை அதிகரிப்பால் உயிரிழப்போர் எண்ணிக்கை — குறிப்பாக மத்திய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய, வடஆபிரிக்க நாடுகளில் உயிரிழப்போர் எண்ணிக்கை — இன்னும் இருபது வருடங்களில் இரண்டு மடங்காகும் ஆபத்துக் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

''கிறீன் ஹவுஸ்'' வாயுக்கள் மிதமிஞ்சிக் காற்றில் சேருவதற்குக் காரணமாக இருக்கும் உற்பத்தித் துறைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து மாநாட்டில் விவரமாக ஆராயப்பட்டபோதிலும் அதற்கு உற்பத்திநிறுவனங்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதாக மாநாட்டின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

உலகின் ஒரு தரப்பினர் தமது பொருளாதாரத்தை வளமாக்குவதற்கு, அதனூடு தமது வசதிகளைப் பெருக்குவதற்கு மேற்கொண்ட செயற்பாடுகள் உலகத்தின் ஏனைய தரப்பு மக்களை மிக மோசமாகப் பாதிக்கவுள்ளன

தாம் செய்யாத தவறுக்குத் ''தண்டனை'' பெறவுள்ள நாடுகளே இது விடயத்தில் அதிக கவனம் எடுத்து ''கிறீன் ஹவுஸ்'' வாயுக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தப் போராட வேண்டி உள்ளது. உலக நடப்பு இப்படியும் விசித்திரமாகிவிட்டது.

# நற்செய்தி வழியில் நின்று நம்மை நாமே மீட்டுப் பார்ப்போம்!

இறை வார்த்தையில் ஒலித்த வசனமே இவை. ''நான் யார் என மக்கள் சொல்கின்றார்கள்'' மனித மனங்களுக்குள் இன்று இக் கேள்வி பலராலும் மீட்டுப் பார்க்கப்படுகின்றது. இவை வெளி அரங்கமாக இல்லாவிட்டாலும் உள் அரங்கத்தில் கேட்டுக் கொண்டே இருக்கும் கேள்வி தான். இதன் வெளிப்பாடுகளே எமது விழாக்களும், பாராட்டு நிகழ்வுகளும், தம்மை வெளிப்படுத்த விருந்துகளும், சந்திப்புக்களும் பலவித பெயர்களில் நடைபெறுகின்றன. இதில் உயர்வு, தாழ்வு, துறவு, குடும்பம், அரசியல் என்ற பேதமில்லை.

பிறந்த நாள், பட்டம், பதவிஏற்றநாள், திருமண நாள் 'யூபிலி நாள் என தொடரும் சந்திப்புகளை நடத்துபவர்கள் ''நாம் யார் என மக்கள் பேசிக் கொள்கிறார்கள்'' என மதிப்பிட்டுக் கொண்டாலும் தம்மைத் தாமே மீட்டுப் பார்க்கவும் இவ்வார்த்தைகள் சந்தர்ப்பம் தருவதை ஏன் தவிர்த்துக் கொள்கின்றார்கள்? மற்றவர் எம்மைப்பற்றிப்புகழ்ந்து செல்லும்போது ஏற்றுக் கொள்ளும் எம்மனம், எம்மை விமர்சிக்கும்போது அதன் குறை — நிறைகளை எமக்கு ஏற்றதுதானா என ஏன் கேட்டுப்பார்க்கதயங்குகின்றோம்?

பலரும் பலவிதத்தில் குறிப்பிட்ட போதும் இவை எமக்குத் தகுதியானதா? ஏற்றுக் கொள்ளக் கூடியதா? என்னுள் உள்ள தவறுகள் என்ன? சரியானவை எவை? என எம்மை நாமே நற்செய்தி வழி நின்று மீட்டுப் பார்த்துக் கொள்ள நற்சிந்தனைகள் இன்று வழி சமைக்க வேண்டும். ஆன்மீகம் பேசப்படுவதற்காக அல்ல, வாழப்படுவதற்காகவே என்று வாழ்ந்து காட்டிய வார்த்தை வழி வாழ அழைக்கப்பட்டோம். அந்த வார்த்தையும் வாழ்வும் ஒன்றித்த தலைமையை ஏற்று வாழும் ஒவ்வொரு நெஞ்சங்களும் மீட்டுப்பார்க்க ''நான் யார் என மக்கள் சொல்கின்றார்கள்'' என்பதைக் கேட்டது போல நீங்கள் உங்களை மீட்டுப் பார்த்து உங்கள் நண்பர்கள், உறவுகள், அயலவர், ஆதரவாளர் மட்டில் நீங்கள் நான்

### ஞாயிறு நற்பிரசாதம்

யார் எனச் சொல்கின்றீர்களா?'' என்று கேட்டுப் பார்த்தால் அதற்கு கிடைக்கும் விடையை விட உங்கள் மனச்சாட்சியால் பகிர்ந்தளிக்கும் விடை அதற்கு உடந்தையானதா? அல்லது பாவச் சுமைகளால் அமிழ்த்தப்பட்ட என் வாழ்வு போல வாழ்வினால் வெளிவேடம் இடப்பட்டதானதா?என சுய மதிப்பீட்டினால் சுத்தப் படுத்த வேண்டிய, தீய செயல்களை இனங்கண்டு கொள்ள எமது சிந்தனைகள், செயல்கள் வார்த்தை வழி வாழ்வாக மாறவும் நற்செய்தி வழிகாட்டுகிறது.

''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன் நலம் துறந்து தன் சிலுவையை நாள் தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம்உயிரை காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். என் பொருட்டு தன் உயிரை இழக்க விரும்பும் எவரும் அதைக் காத்துக் கொள்வர். ''ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பார் எனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?'' என்பதை மீட்டுப் பார்த்து எம் மனத் திரையில் உள்ள போலிமாயைகளைக்களைந்து இறை வழியில் புது வாழ்வு மலர வார்த்தை வழி வாழ்வை வாழ்ந்து நற்செய்தியின் சாட்சிய அழைப்பிற்கு அர்த்தம் கொடுப்போமா? எம்மால் சரி என்பதைத் தெரிந்தும் செய்யத் தயங்கி பிழை என்பதைத் தெரிந்தும் செய்து கொண்டும் எமது வாழ்க்கையில் மாற்றத்தை எதிர்பார்ப்பது எவ்வளவு போலித்தனம் என்பதை உணர்வோமா? எதை விதைத்தோமோ அதைத் தான் அறுவடை செய்கின்றோம். நான் யார் என மக்கள் சொல்கின்றார்கள் என மீட்டுப் பார்க்கும் நேரத்தில் நாம் எமது வாழ்வால் என்ன செய்து கொண்டு இருக்கின்றோம். எப்படிப்பட்ட நன்மைத் தனங்களால் எம் வாழ்வு மாற்றம் பெற முடியும் என வாழ்வால் வெளிப்படுத்துவோமா? நற்சிந்தனைகளை பயனுள்ள தாக்குவோமா? ★

**யோசப் பாலா**

## சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் லக்ஷ்மிநாராயணர் கல்யாணமண்டபத்தில் இன்று ஞாயிறு மாலை 4-00 மணிக்கு யாழ் பல்கலைக் கழகபட்டப்படிப்புகள்பீடாதிபதிபேராசிரியர் அ. சண்முகதாஸ் 'பெரியாழ்வார்' எனும் தலைப்பில் திவ்ய பிரபந்த உரை நிகழ்த்துவார். (ஐ)

★ ★ ★

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி கோயிலில் இரண்டாவதுவார சோமவார உற்சவ பூசை நாளை திங்கட்கிழமை மாலை4மணிக்குநடைபெறும்.

✶ ✶ ✶

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தில்சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு எதிர் வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3—30 மணிக்கு விசேட அபிஷேகம் இடம் பெற்று விநாயகர் வீதியுலாவும் இடம் பெறும்.

## மருத்துவ முகாம்

நீரிழிவு நோய் விழிப்புணர்ச்சி மாதத்தை முன்னிட்டு நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் லயன் மாவட்டத் தலைவர் எஸ். எஸ். அருளானந்தம் தலைமையில் யாழ். இராமநாதன் வீதியில் உள்ள சத்யசாயிபாபா சேவை நிலையத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு. இரத்த அமுத்தம்' கண் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளதாக செயலாளர் இ இராஜகுலேந்திரன் தெரிவித்துள்ளார்.

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் வல்லரசுகளின் கௌரவ போட்டி குறித்து மண்டேலா கவலை

கேப்டவுன், நவ. 26

சமாதானத்தை ஏற்படுத்திய கௌரவத்தைப் பெறுவதில் மட்டுமே வல்லரசுகள் ஆர்வம் காட்டி வருவதாக தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கவலை தெரிவித்துள்ளார்.

மேற்காசிய பிரச்சினையில் நெல்சன் மண்டேலாவைத் தலையிடுமாறு பலஸ்தீனத் தரப்பில் கோரப்படுவது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேற்காசியச் சமாதானப் பேச்சுக்களில் தான் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்த மண்டேலா ஆனால் அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா உட்பட முக்கிய வல்லரசுகள் சமாதானத்தை ஏற்படுத்துவதில் உண்மையான ஆர்வத்தைக் காட்டவில்லை.

அவை சமாதானத்தை ஏற்படுத்திய கௌரவம் யாருக்குச் செல்லும் என்பதில் தான் ஆர்வம் காட்டுகின்றன என்று விசனம் தெரிவித்தார்.

முக்கிய வல்லரசு நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட முடியுமானால் சமாதான முயற்சிகளில் மூன்றாம் தரப்புத் தலையீட்டுக்கு அவசியம் இல்லை என்றும் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

மேற்காசியப் பிரச்சினையில் ரஷ்யா முன்னர் ஆர்வம் காட்டி வந்த போதும் அமெரிக்காவின் தலையீட்டை அடுத்து தற்போது ரஷ்யா மௌனம் சாதித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)



மண்டேலா

### நாளை

**கார்த்திகை 12**

**திங்கட்கிழமை**

திதி: துதியை முழுவதும்

நட்சத்திரம்: கேட்டை முன் இரவு 7·45 வரை

சுபநேரம்: 12.13—1.43

ராகுகாலம்: 7.43—9.13

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வெப்பம் காரணமாக இறப்பவர் எண்ணிக்கை உலகில் அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் வெப்ப நிலை காரணமாக உயிரிழப்பவர்கள் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டளவில் இரு மடங்காகும் என்று அமெரிக்க கால நிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் அதிகரித்து வரும் 'கிறீன் ஹவுஸ்' என்ற வாயுவின் காரணமாக சூழல் வெப்ப நிலை உயர்வடைந்து செல்வதாக தெரிவித்த வானியல் விஞ்ஞானிகள் இதன் தாக்கம் காரணமாக உலகின் முக்கிய நகரங்களில் வெப்பத்தால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் 15 முக்கிய நகரங்களில் வெப்பநிலை காரணமாக வருடாந்தம் 1500 பேர் உயிரிழக்கின்றனர் 2020ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 3000 தொடக்கம்4000 வரை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

உலகின் ஏனைய முக்கிய நகரங்களான ரொரண்டோ, ஷங்காய், ஏதென்ஸ், போன்ற நகரங்களிலும் வெப்ப நிலையால் உயிரிழப்போரின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் சூழலியல் ஆய்வாளர்கள் கடந்த வாரம் நடத்திய மாநாட்டில் அதிகரித்து வரும் 'கிறீன்ஹவுஸ் வாயுவை, கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடைபெற்றது.

## சென்னையில் தீ விபத்து

தமிழகத்தின் சென்னை மெரீனா கடற்கரையில் போர் நினைவுச் சின்னம் அருகே ஏற்பட்ட தீவிபத்தில் 400 குடிசைகள் எரிந்தன இந்த விபத்தில் ஏற்பட்ட. உயிர்ச்சேதம் குறித்து விவரம் தெரிவிக்கப்படவில்லை.

## உலகப் பொருளாதார மாநாடு

புதுடில்லி நவ 26

உலகப் பொருளாதார உச்சி மாநாடு இந்தியாவில் நடைபெற உள்ளது கைத்தொழிற்சபைகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் உலகின் பல பாகங்களில் உள்ள அரசுகளினதும், தனியார் அமைப்புகளினதும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஐரோப்பிய யூனியனுடன் ஆலோசனை

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் தலைவர்களும், 6 பல்கன் நாடுகளின் தலைவர்களும் குரோஷியாவில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நாடுகளிடையேயான ஜனநாயக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், அகதிகள் பிரச்சினை தொடர்பான ஒன்றுபட்ட கொள்கை வகுப்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது. (ஒ)


### உதயவாக்கு

நல்லொழுக்கம் நாவில் உறைவதில்லை, அது இதயத்தில் வாழ்கிறது.

— யங்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

(26 - 11 - 2000)



## அமரர் சீனியர் இராசரட்ணம்

(கிளியர்)

தோற்றம் 07 - 07 - 1946 மறைவு 01 12 - 1997

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டுகள் ஆனாலும் அழியாது உங்கள் அன்பு முகம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

அன்புத் துணைவி: பவளம் (கொழும்பு),
பிள்ளைகள்: மோகன் (சுவிஸ்), ரசீதன் (சுவிஸ்),
சுகந்தன் (லண்டன்), சுதர்சன் (கொழும்பு),
யசீலா (சுவிஸ்), யசீதா (கொழும்பு).
மருமகன்: நாகேந்திரம் (சுவிஸ்).
மருமகள்: கல்பனா (சுவிஸ்),
பேரப்பிள்ளைகள்; நிதுஜா (சுவிஸ்),
நிசானா (சுவிஸ்), தனுயன் (சுவிஸ்) மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
மகன்: சுதர்சன் (சொக்கு), கொழும்பு.

(80753)

## நவீனசந்தையில் மலசலகூடம்

யாழ் நவீன சந்தைப் பகுதியில் 10 லட்சம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைக்கப் படவுள்ளன என்று மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆண், பெண் இரு பாலாருக்கும் அமைக்கப்படவுள்ள இந்த மலசலகூடங்களின் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன [இ-10-6]

## மண்ணெண்ணெய் பாவனை வீழ்ச்சி

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெயின் விலை அதிகரித்ததைத்தொடர்ந்து அதன் பாவனை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

கடந்த வாரம் முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அதன் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக எரிபொருள் விற்பனை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-71)

## இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவு

கொழும்புத்துறை, நவ. 26

யாழ். பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஜே.81- கோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்குரிய இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு விரைவில் வழங்கப்பட உள்ளது.

இக் கொடுப்பனவுக்குரியவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டையுடன் இல. 14, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கிராம உத்தியோகத்தர் பணிமனையில் கொடுப்பனவு பெறும் அத்தாட்சிக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு இப் பகுதிக் கிராம உத்தியோகத்தர் யோ நீ பொ. பாக்கியராசா தெரிவித்துள்ளார். (ஐ-30)

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# 2001 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 06-12-2000 நண்பகல் 12 00 மணி வரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 07-12-2000 நண்பகல் 12 00 மணி வரை
03. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 07-12-2000 பி ப 2 00 மணி வரை
04. கேள்விப்பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதியில் தயாரித்து மூலப்பிரதியை இவ் அலுவலக கேள்விப் பெட்டியிலும் இணைப்பிரதியைப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல. 29, செட்டித்தெரு, நல்லூர் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

| குத்தகை விவரம் | கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்.** | | | |
| 01. வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 50/- | 100/- | 550.00 |
| 02. அச்சுவேலி பொதுச்சந்தை துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட | 500/- | 5000/- | 728200.00 |
| **புத்தூர் உப அலுவலகம்.** | | | |
| 01. ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 50/- | 100/- | 1375.00 |
| 02. ஆவரங்கால் மீன் சந்தை | 25/- | 50/- | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்.** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100/- | 150/- | 3500.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 50/- | 150/ | 1200 00 |
| 03. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 11500.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்.** | | | |
| 01. இருபாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 300/- | 2500/- | 73150 00 |
| 02. இருபாலை மீன் சந்தை | 50/- | 150/- | 1870.00 |
| 03. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 2475.00 |
| 04. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 2475.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்.** | | | |
| 01. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 250/- | 4000.00 |

பூ. குணசிங்கம்
(ஜே.பி.யு.எம்)
தவிசாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
24.11.2000.

(சி/13982)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 05 - 1929



மறைவு 08 - 12 - 1999

## அமரர் கந்தையா இளையையா


எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்து முதலாவது ஆண்டு நிறைவான இன்று அவரை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

தாய், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குப்பிளான்,
பங்கிலிட்டி,
ஏழாலை.

(80815)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திரவியம் விஷியதரன்

(யாழ் நாவற்குழிமகா வித்தியாலய பழைய மாணவரும், கோயில் வீதி, இராசநாயகம் கராஜ் மெக்கானிக்கராக தொழில் புரிந்தவரும் ஆவார்)

தோற்றம் 05 - 11 - 1968 மறைவு 27 - 10 - 2000

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசப் பிணைப்புடனே நீ இருந்தாய்!
துன்பம் பல வந்த போதும துணிவுடனே
தூய பணி நீ செய்து வாழ்ந்தாய்!
இன்பம் பல பெற்று உயர வேண்டுமெனும்
உயர்வான சிந்தையுடன் வாழ்ந்தவனே!
என்பும் உரியர் பிறர்க்கென்ற வள்ளுவனின்
ஈடில்லா இலட்சியத்தில் நீ வாழ்ந்தாய்!

எங்கள் குடும்ப ஒளிச்சுடர் நோயுற்றிருந்த வேளை இன் முகத்துடன் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் மரணச் சடங்கின் போது நேரில் சமுகம் தந்து துன்ப துயரங்களில் பங்கு கொண்ட உற்றார், உறவினர் அயலவர்கள், நண்பர்கள், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், பத்திரிகை, துண்டுப் பிரசுரம் மூலம் அஞ்சலி வெளியிட்டோருக்கும் 2000 — 11 — 24 அன்று வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (2000— 11— 26) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
கேரதீவு. றோட்,
நாவற்குழி, கைதடி.

தற்காலிகமுகவரி:
447, இராமலிங்கம் வீதி,
நல்லூர்,
முடமாவடி, யாழ்ப்பாணம்.


(80882)

# இறந்த பின்னரும் உலகைக் காணலாம் அதற்குக் கண்தானம் செய்யுங்கள்!

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
 - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

உலகுக்குத் தமிழ் அளித்த பொதுமறை இது. நல்லவர்களின் எலும்பும் கூட பிறருடைய நன்மைக்குப் பயன்படும் என்று நாம் வாழவேண்டிய வாழ்க்கை முறையை எளிதாக இரு அடிகளில் உரைத்துச் சென்றார் வள்ளுவர்.

ஆனால் நாம் இப்படித்தான வாழுகின்றோமா என்று கேட்டால் இல்லை என்ற கசப்பான உண்மையே பதிலாக முன்நிற்கிறது.



யார் சொன்னது அப்படி? தமிழர்களின் பண்பாடு வீரம், அன்பு இரண்டும் கலந்த உயர்வுடையது அல்லவா என்று சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்கலாம்.

மன்னிக்கவும், யதார்த்த வாழ்க்கையில் தமிழரின் வீரத்தில் சந்தேகம் இதுவரை ஏற்பட்டதில்லை உலகுக்கு. இனியும் ஏற்படப்போவதில்லை என்று நம்பலாம்.

அன்புதான் சிறிது இடிக்கிறது. காரணத்தைச் சொன்னால் நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள்.

நம் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னர், தீயும் மண்ணும் தின்னப் போகும் உடலில் இருந்து உயிருடன் இருப்பவர்களுக்குப் பயன்தரும் விதத்தில் வழங்கக கூடியவை கண்கள். இருளில் தவிப்பவர்களுக்கு பார்வை வழங்கக்கூடிய கண் தானம் யாழ்.குடாநாட்டில் எந்த நிலையில் உள்ளது?

மாதத்துக்கு 100பேர் கண்தானம் செய்கிறார்களா?

இல்லை.

சரி..... 50 பேர்?

ஊஹூம்...

குறைந்தது 10 பேர்?

உங்களால் சரியாகக் கூறமுடியாது. ஏனென்றால் வருடத்துக்கு 2 பேர் என்று கூட அடித்துச் சொல்ல முடியாத நிலையில் கண்தானம் உள்ளது.

இறந்த சடலத்தில் இருந்து கண்களை, உயிருடன் வாழும் உங்களில் ஒருவருக்கு கொடுக்க முடியாத நீங்கள்......?

கேலிச் சிரிப்புடன் நம்முன்னே இந்தக் கேள்வி எழுந்து நிற்கிறது. கேட்பவர்கள் வேறு யாருமல்லர், நமக்குத் தெரிந்தவர்கள்தான். தொடர்வதைப் படித்தால் உங்களுக்கே புரியும்.

## இலங்கை முதலிடம்

இன்று உலகில் கண்தானத்தில் முதலிடம் வகிக்கும் நாடு இலங்கை.

**பாமரன்**

அதேபோல் கண்தானம் செய்பவர்களைக் கணிசமான அளவில் கொண்டுள்ள இந்தியாவில் கண்தானத்தில் முதலிடம் வகிக்கும் மாநிலம் குஜராத்.

இதற்கு குஜராத் மற்றும் இலங்கைக்கு இடையே உள்ள ஒரு ஒற்றுமையே காரணம். அது என்ன தெரியுமா? இலங்கையிலும் குஜராத்திலும் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள். பௌத்த மதத்தில் தானம் செய்வதன் மகத்துவம் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதால், இறந்த பின்னரும் அவர்கள் கண்களை பிறருக்கு வழங்குவதில் பெருவிருப்புக் கொண்டுள்ளனர்.

ஓஹோ, அவர்கள் மதத்தில் சொல்லப்பட்டிருப்பதால்தான் அப்படியா? அதுதானே பார்த்தோம்.

இப்படிக் கூறித் தயவுசெய்து நழுவாதீர்கள்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
 கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும்
 ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா வென்ற
 வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாம்
 கோத்தும்பீ.

சமயக் குரவர் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் காளஹத்திப் பெருமான் மீது கொண்ட பக்தியால் சிவலிங்கத்தின் கண்ணில் இருந்து இரத்தம் வடிந்தபோது தன் கண்ணைப் பிடுங்கி சிவலிங்கத்துக்குத் தந்து திண்ணன் என்ற வேடன் கண்ணப்பநாயனாராக இறைவனால் உயர்த்தப்பட்ட மகிமையை பாடி வைக்கவில்லையா? நாமும் அதைப் படித்ததில்லையா?

எதையும் உபதேசிப்பதுடன் இந்து மதம் நின்றுவிடவில்லை. உபதேசத்தின்படி வாழ்ந்து இறைவனை அடைந்தவர்கள் மூலம் நமக்கு வழியும் காட்டுகிறது.

அப்படிக் காட்டப்பட்ட வழிகளில் ஒன்றுதான் கண்ணப்ப நாயனார் கதை. பக்தியின் உச்சம் அவர் செய்த கண் இடந்து சிவலிங்கத்துக்குத் தந்த கதை.

இந்து சமயத்தின் அடிப்படைகளான நான்கு வேதங்களிலும் சரி, உபநிடதங்களிலும் சரி எதிலுமே உடலுறுப்புக்களை தானம் செய்வதற்கு எந்தவிதத் தடையும் விதிக்கப்படவில்லை என்பது தமிழகத்தின முதுபெரும் இந்து மதத்தலைவர்களின் ஒன்றுபட்ட முடிவு. இதனால்தான் மதநம்பிக்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றுபவர்கள் கூட இப்போது தமிழ்நாட்டில் மனமுவந்து இறந்த பின்னர் தமது கண்களைத் தானம் செய்யப் பெரும் எண்ணிக்கையில் முன்வருகிறார்கள்.

இந்து மதத்தில் மட்டுமல்ல கிறிஸ்தவர்களின் புனித விவிலியத்தில் கூட -

தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு எதுவும் இல்லை. (யோவான் 15:13)

என்று சொல்லப்பட்டிருக்கிறதே! என்னப்பா, உயிர் அது, இது என்று பயம் காட்டுகிறீர்களே என்று நீங்கள் அச்சப்படுவது தெரிகிறது.

உலகில் எந்த மதமும் மனிதனை நன்கு வாழவே வழிகாட்டுகிறது. விவிலியம் மட்டும் விதிவிலக்காகுமா என்ன? அந்தப் புனித நூலில் மற்றவர்களுக்கு எதனைத் தருவது மிக உயர்வானது என்றும் கூறப்பட்டுள்ளது.

கண்தான் உடலுக்கு விளக்கு; கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். அது கெட்டுப் போனால் உங்கள் உடல் முழுவதும் இருளாயிருக்கும். (மத்தேயு7:22)

இப்போது உங்கள் அச்சமும சந்தேகமும் அகன்றிருக்கும்

மொத்தத்தில் இந்து மதமோ, கிறிஸ்தவமோ கண்தானத்திற்கு எதிரான கருத்தை கூறியதில்லை. அப்படியானால் குடாநாடு ஏன் கண்தானத்தில் பின்தங்கி நிற்கிறது? அன்புக்குரியவர் இறந்த பின்னர் சடலமாக இருந்தாலும் அவரது அங்கம் ஒன்றை இழக்க மனம் வருவதில்லையோ? குடாநாட்டில் கண்தானம் செய்யப்படுவதில் ஏன் இந்த மந்த நிலை. யோசிக்க, யோசிக்க குழப்பமே மிஞ்சியது. குழப்பத்தை தீர்க்க யாழ்.மருத்துவமனை **கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாஸை** அவர்களைச் சந்தித்தோம்.

கண்தானத்தை மேம்படுத்த சகல விதங்களிலும் தனது ஒத்துழைப்பை நல்கத் தயாராக இருப்பதாக உறுதி கூறிய அவர், குழப்பங்களையும தீர்த்துவைத்தார்.

அவர் மூலம் பெற்ற தகவல்களை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

இன்று நூற்றுக்கு 99சதவீதமான சடலங்கள் 'எம்பாம' செய்யப்பட்ட பிறகே இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டுத் தகனமோ, அடக்கமோ செய்யப்படுகின்றன. இப்படி 'எம்பாம்' செய்யும்போது உடலினுள் உள்ள இதயம் முதல் அனைத்து உறுப்புகளையும் (இதனை விலாவாரியாகச் சொன்னால் சிலருக்கு வயிற்றைப் புரட்டக் கூடும். மன்னிக்கவும், வேறு வழியில்லை.) அகற்றிவிட்டு அவை இருந்த இடங்களில் பஞ்சு வைத்துத் தைத்து விடுவார்கள். உடலில் இருந்து அகற்றப்பட்ட உறுப்புக்களின் கதி....? ஒதுக்குப்புறமான இடத்தில் புதைக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகிவிடும்.


ஆனால் கண் அப்படியல்லவே.

## அவசியத் தேவையான கண்வங்கி யாழ்ப்பாணத்தில் உருவாகுமா?

கண்கள் இறந்த பின்னரும் பார்க்கும் அதிர்ஷ்டம் யாருக்குக்கிட்டும். கண்தானம் செய்பவருக்கே அந்த வாய்ப்பு கிடைக்கும்.

### அவலட்சணம் ஏற்படுத்தாது

சரி, கண்ணை எடுத்தால் அந்த இடம் சடலத்தில் அவலட்சணத்தை ஏற்படுத்துமா என்று நீங்கள் கேட்கத் துடிப்பது தெரிகிறது. கவலை வேண்டாம், 'எம்பாம்' செய்யும்போது உள் உறுப்புக்கள் அகற்றப்பட்டது எவ்வாறு தெரியாமல் இருக்கிறதோ, அது போலவே கண்தானம் செய்யப்பட்ட பிறகும் கண்கள் எடுக்கப்பட்டது தெரியாமல் மருத்துவர்கள் செய்து தருவார்கள்.



கண்ணில் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படும்போது எடுத்த படம்.

சரி கண்தானம் செய்வதற்கு நாங்கள் தயார். ஆனால் எப்படி? எங்கு? என்று கேட்பவர்களுக்கு, முதலில் கண்தானம் செய்ய முன்வரும் உங்களுக்கு நன்றி.

இறந்தவரின் அதிக வயது கண்தானம் செய்வதற்கு ஒரு தடையல்ல. 10 வயதிற்கு மேற்பட்ட எவரும் இறந்த பின்னர் கண்களைத் தானம் செய்ய முடியும். ஆனால் அதில் சிறிய கட்டுப்பாடு உள்ளது. இறந்தவர் புற்று நோய், வைரஸ் கிருமிகளால ஏற்படும் அம்மை போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டிருந்திருத்தல் கூடாது. காலத்தின் கோலம் இன்னொரு நோயையும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. அதுதான் எயிட்ஸ். இத்தகைய நோய்களால் தாக்கப்பட்டிராத எந்த ஒருவரும் கண்களைத் தானம் செய்து புண்ணியம் தேடிக்கொள்ளலாம்.

சர்க்கரை வியாதி உள்ளவர்களின் கண்களைக்கூடத் தரலாமா? சந்தேகமே வேண்டாம். தரலாம்.

இன்னும் சொல்லப் போனால் கண்களில் பார்வைக் கோளாறுக்காக சத்திர சிகிச்சை செய்து கொண்டவரும், இறந்த பின்னர் தனது கண்கள் மூலம் பிறருக்கு பார்வை தரமுடியும்.

ஏனென்றால் சத்திர சிகிச்சைகள் எப்போதும் கண்ணின் உட்புறத்தில் உள்ள வில்லைகளில்தான் மேற்கொள்ளப்படுகின்றன.

தானம் செய்யப்படும் கண்களில் வெளிப்புறத்தில் உள்ள விழிவெண்படலம் உரித்தெடுக்கப்பட்டு அதில் உள்ள கருமணி மட்டுமே மற்றொருவருக்குப் பொருத்தப்படும்.

இந்தவேளையில் பார்வை இழந்தவர்களுக்கு ஒருவார்த்தை. உங்கள் கண்களில் கருவிழிகளில் பாதிப்பு ஏற்பட்டு அதனால் நீங்கள் பார்வையற்று இருந்தால் மட்டுமே தானமாகக் கிடைக்கும் கண்மூலம் பார்வையடைய முடியும்.

நாம் விடயத்திற்கு வருவோம். ஒருவர் இறந்து எவ்வளவு நேரத்திற்குள் கண்கள் வழங்க முடியும்?

இறந்து சுமார் 6 மணி நேரத்திற்குள் எடுக்கப்படும் கண்களையே பயன்படுத்த முடியும். மருத்துவர்கள் தாம் பெற்றுக்கொண்ட கண்களை குளிர்சாதனப் பெட்டியில் 4° குளிர் நிலையில் வைப்பதன் மூலம் 72 மணித்தியாலங்களுக்கு அவற்றை பத்திரப்படுத்துவார்கள். அதற்குள் பார்வையற்றவர்களுக்கு கண்களின் பாகம் பொருத்தப்பட்டுவிடும்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். பௌத்தர்களில் ஒருவர் இறந்தால் முதலில் கண் மருத்துவருக்கு அறிவிக்கப்பட்டு, அவர் வந்து கண்களைப் பெற்றுக் கொண்ட பின்னரே தாய், தந்தை, மனைவி அல்லது கணவன் சடலத்தைப் பார்ப்பது வழக்கம். அதனால்தான் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஓரிரு கண்களும் கொழும்பில் இருந்தே வந்தன.

குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு மற்றும் யுத்தச் சூழலில் 6 மணி நேரத்திற்குள் மருத்துவருக்கு அறிவித்துக் கண்ணை வழங்குவது சாத்தியமா?

இதனைவிட எவ்வளவோ சாதித்துக் காட்டியவர்கள் நாம். இது முடியாதா?

இன்று உலகில் கண்களை அதிகம் தானம் செய்வது இலங்கையில் தான். இது எப்படிச் சாத்தியமானது? **ஹட்சன் டி சில்வா** என்ற தனி மனிதனின் எண்ணம், முயற்சி இன்று ஆல்போல் விழுது பரப்பி நிற்கிறது. ஆம், இலங்கைக் கண் வங்கியின் பிதாமகன் ஹட்சன் தன்னந்தனியாக ஒவ்வொரு ஊராகச் சென்று கண்தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவுதான் இது.

தனி ஆளால் முடியும் என்றால், குடாநாட்டில் உள்ள பொதுநல அமைப்புக்களைச் சேர்ந்தோர் மனம் வைத்தால் காரியம் கைகூடாதா?

கண்வங்கி என்றவுடன் அவர்கள் கூடப் பெரிதாகக் கற்பனை செய்து புருவம் உயர்த்தக் கூடும். தயவுசெய்து நம்புங்கள். கண்வங்கி என்றால சாதாரண நல்ல நிலையில் இயங்கும் ஒரு குளிர்சாதனப் பெட்டிதான். தானமாகப் பெறப்படும் கண் 4° குளிர் நிலையில் குளிர்சாதனப்பெட்டியில், அதற்குரிய பெட்டகத்தில் வைத்து பாதுகாக்கப்படும்.

இந்தியாவின் தமிழ் நாட்டில் பெரும்பாலான கண் வங்கிகள் தனியார் தன்னார்வ அமைப்புகளால் தான் நடத்தப்படுகின்றன. அத்தகைய அமைப்புகள் கண்தானம் குறித்த விழிப்புணர்வை பட்டி தொட்டி எங்கும் பரப்புவதில் முன்நிற்கின்றன.

### என்ன செய்ய வேண்டும்?

இறந்த பிறகு தனது கண்ணைத் தானம் செய்ய விரும்பும் ஒருவர் ஒரு அமைப்பினரை அணுகினால் அங்கு அவருக்கு ஒரு படிவம் தரப்படுகிறது. அதனை அவர் நிரப்பி, 'எனது மரணத்தின் பின்னர் கண்களைத் தானமாகத் தர ஒப்புக்கொள்கிறேன' என்று கையெழுத்திட்டு ஒப்படைப்பார். அதை பொது நல அமைப்பினர் கோப்பில் வைத்துக் கொண்டு தமது தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரியுடன் கூடிய அட்டையை அவரிடம் தருவார்கள்.

எப்போதும் அட்டையை தன்னுடன் வைத்திருக்கும் அவர் இறக்க நேரிட்டால், அந்த அட்டையைப் பார்க்கும் எவரும் அமைப்புக்குத் தகவல் தெரிவித்தால் இறந்தவரின் கண்களைப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதே நடைமுறையை இங்கும் பின்பற்றினால் நிச்சயமாக யாழ். குடாவும் கண்தானத்தில் முன்நிற்க முடியும்.

இனியும் திண்ணைப் பேச்சு வீரர்களாகவே இருக்கப் போகிறோமா? அல்லது உலகத்தாருக்குப் பார்வை வழங்கும் புனிதப் பணியில் பங்கேற்கப் போகிறோமா?


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 10 - 1935 | 26 - 10 - 2000 |

அமரர்
**கணபதிப்பிள்ளை வேலாயுதம்**

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை பாசத்துடன் வழி நடத்திய அன்புத் தெய்வமே!
உங்கள் புன்முறுவல் பூத்த முகத்தைக் காண்பதெங்கே?
உங்கள் ஆத்மா சாந்தியடைய வெற்றிக்காட்டு விநாயகரை வேண்டுகின்றோம்.

நாளை (27-11-2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்.**

*"முல்லை"*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(80862)

# இந்த வார இராசி பலன்

## 25.11.2000 - 01.12.2000

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| | | | |
| வெ கே | சூ▲ | புத/சந் | செவ் |

*மாற்றம்:* 25-11-2000 இல் விசாகம் - நட்சத்திரம் - துலாம் இராசியில் சந்திரன் நிற்கும். 27-11-2000 இல் விருச்சிகம் இராசியில் புதன் மாறும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு உலக நாடுகள் புதிய அழுத்தங்களைக் கொடுக்கும் உலக மகா சபையின் அந்தரங்கப் பேச்சு பயனைத் தரும். மக்கள் துன்ப துயரங்களை அனுபவிக்கமுடியாது சமாதானத்தை உருவாக்குங்கள் எனக் குரல் எழுப்பச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். இந்தியா புதிய அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம். இந்தியாவின் வடக்கில் கலகம், சில அரசியல் தலைவர்கள் தீவிரவாதிகளால் தாக்கப்பட இடமுண்டு. மத்திய கிழக்கில் பதற்றமும், கிழக்கு நாடுகளில் மழை, காற்றழுத்தம், புயல், என்பவற்றால் அழிவு, வெள்ளப்பெருக்கும் மக்களின் இடப்பெயர்வுகளும் - அமெரிக்க அரசியலின் மாற்றத்தால் சில அழிவுகளும் இடம்பெறும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனிதர்கள் செய்வது சிலரது கண்ணுக்குத் தெரியாமல் விட்டாலும் இந்த மண்ணுக்குத் தெரியாமலா இருக்கும்? விண்ணுக்கு புரியாமலா இருக்கும்? எனவே உங்கள் தொழில் ஸ்தானத்தில் நியாயத்துடன் நடந்து கொள்ளுங்கள். சாட்சிகள் எல்லாம் உண்மையாக இருக்கமாட்டார்கள் இக் காலத்தில் பணத்திற்காக அனேகர் பொய்ச்சாட்சி சொல்லுகிறார்கள் என்பது பலருக்கும் புரியும் விசயமாகும். எனவே தொழில்

# மகாதேவா ஜோதிடம்

ஸ்தானத்தில், தொழிலில் கவனமாக இருக்கவும். போட்டி, பொறாமைகள் ஏற்பட்டபடி இருக்கும். எதிர்ப்பாளர் எதிர்ப்பார்கள். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். தாய் வழியிலிருந்து எதிர்ப்புகள் வரும். பொதுத் தொண்டினால் ஓடியாடித் திரிவீர்கள். அரசியல், தத்துவம் பேசிப் பேசித் திரிவீர்கள். ஏழை அப்பாவிகளுக்காக இரங்குகிறீர்களா? கைகால் பிடிப்பு, சளித் தொல்லை, தோல்கடி, உஷ்ண பீடைகள் வரலாம். தேசிக்காய் நீர் குடிக்கவும். அரசியல்துறை, வியாபாரத் துறை, பொதுத் தொண்டு போன்ற துறைகளில் மாற்றங்களும் இலாபங்களும் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.*

### இடபம்

மேலிடம் பிழைவிட்டால் கீழிடம் ஏன் தவறு செய்யாது? இதனால் கீழிடத்தின் பிழைகளை மேலிடம் கண்டிக்க முடியாமல் ஏற்படும் அல்லவா? எனவே தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களுடன் நிதானமாக நடந்து பொருளில் சிந்தனையாக இருந்து கொள்ளுங்கள். கெடுதிகள் பின்பு கஷ்டங்களைத் தரஇடமுண்டு. குடும்பத்தில் நல்லவை நடக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தலைப்பாரம், தொண்டை வருத்தம், உஷ்ணபீடைகள், கைகால் பிடிப்புவரும். அடிக்கடி பொதுஇடங்கள், கோயில்கள், எதிர்ப்பாளர் இருக்கும் இடங்களில் எதற்காகவோ போய் வருவீர்கள். இரசிப்பு வேறு விதமாக இருக்கும். கவனமாகப் போய்வாருங்கள். பக்திக்குச் சக்தி உண்டு என்பதை மறவாதீர்கள். பொருள் இழப்பு வரலாம் மருந்துத்துறை, சட்டத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன*

### மிதுனம்

அவசரப்படாதீர்கள். ஒன்றை இழந்து அல்லது பறிகொடுத்தவர்களுக்குத்தான் புரியும் எவ்வளவு மனக்கஷ்டத்தில் அவர்கள் துடித்திருப்பார்கள் என்பது. தொழில் ஸ்தானத்தில் இப்படி ஓர் அனுபவம் உங்களுக்கு. பொருள் ஈடுவதில் நிதானம் தேவையாகும். எதிர்ப்பாளருடன் கருத்து வேற்றுமை வரும். அடிக்கடி கோபிக்காதீர்கள். இதனால் பலர் தள்ளி நிற்பார்கள். ஊக்கத்தால் உயர்வுகள் வரும். அரச அதிகாரிகள், பெரியவர்களினால், இலாபங்கள் கிடைக்கும், பொருள் இழப்பு சிலருக்கு வர இடமுண்டு. தலைவலி, மலச்சிக்கல், அடி காயங்கள் வர இடமுண்டு. போக்குவரத்தில் நிதானமாக இருக்கவும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். குருத்துறை, செய்தித்துறை, இசைத்துறை, ரீவித் துறை போன்ற துறைகளில் தொடர்புள்ளவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.*

### கடகம்

பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் எவ்வளவு கவனமாகத் தமது நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும். அல்லது தலைக்குனிவு நிச்சயம் ஏற்படத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, கவனக் குறைவால் மேலதிகாரிகளிடம் பயப்பாடு என்பன ஏற்பட இடமுண்டு. பழைய வசூல்களில் ஒரு பகுதி வர இடமுண்டு. மாற்றங்கள் நல்லதல்ல. வயிற்றுநோ, இரத்த அழுத்தம், உணர்வுகளால் வேதனை, கைகால் பிடிப்பு என்பன வர இடமுண்டு. தூரத்துச் செய்திகளால் நற்பயன்கள் கிடைக்கும். இனஜனக் கொண்டாட்டங்களால் கலகலப்பு ஏற்பட இடமுண்டு. போக்குவரத்துத் துறை, குருத்துறை, வியாபாரத்துறையினருக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

வாழ்க்கையே ஒரு போட்டிதான். ஆனால் உயர் பதவிப் பீடங்களில் இருப்பவர்கள் தவறுசெய்தால் தெரியாமலா செய்கிறார்கள்? தவறுகள் திருத்தப்பட வேண்டும். ஆனால் திட்டமிட்டுச் சிலர் தமக்குச் சாதகமானவர்களைக் கொண்டு தொடர்ச்சியாகப் பல தவறுகள் செய்து வருவார்கள் ஆயின் கண்டிக்கவோ, தண்டிக்கவோ செய்வதில் குற்றமில்லை. இந்த அனுபவம் தொழில் ஸ்தானத்தில் சகஜம். பொறுமையாக இருந்து உங்கள் செயல்களைச் செய்து வாருங்கள். குடும்பத்தினரின் அபிப்பிராயங்களால் மன வேதனை, புதிய பொறுப்பு, இடமாற்ற யோசனை வந்து போகும். அதிக வேலையால் களைப்பு, கைகால் பிடிப்பு, என்பன வரும். தேசிககாய் நீர் நன்று. வாகனச்செலவு ஏற்படும். மருந்துத்துறை, சட்டத்துறை, குருத்துறை, போன்றவர்களுக்கு அதிக மாற்றங்கள், நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.*

### கன்னி

வாழ்க்கையில் படும் கஷ்டங்களை மற்றைய மனிதர்களிடம் சொல்வதனால் ஓரளவு மனப்பாரம் குறையும். ஆண்டவனிடம் சொல்வதினால் முழுப்பாரமே குறைந்து நாம் விடுதலையாகிறோம். இதைக் கருத்தில் கொண்டு செயற்பட்டபடி இருப்போம். அடிக்கடி அசதிகள் வரும். மறதியால் இழப்பு வரும். எதிர்ப்பாளருடன் மனக்கருத்து ஏற்படலாம். நண்பர்கள் தெரிந்தவர்களால் உதவிகள் கிடைக்கும் குடும்பத்தில் ஒருவரின் ஆடம்பரச் செலவுகளால் யோசனைகள்வர இடமுண்டு. வாகனச் செலவு அதிகரிக்கும் திடீர் கோபம், வாக்குவாதங்களால் பிரச்சினைகள், தொழில் ஸ்தானத்தில் வரலாம் சிரித்துச் சமாளித்து வாருங்கள். தூர இடங்களுக்குப் போவதை நிறுத்துங்கள். தூர இடங்களிலிருந்து புதிய செய்திகள் வரும் காலமாகும். வியாபாரத்துறை, மின்சாரத் துறை, சட்டத்துறை, கோயில்துறை போன்ற துறை தொடர்பானவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.*

### துலாம்

பல்கலைக்கழக மாணவர்களும் எமது குழந்தைகள் தான். அவர்கள் சில தவறுகள் விட்டால் அதை மன்னித்து விட வேண்டும். இதை அவர்களும் புரிந்துணர்ந்து வருங்காலத்தில் செயற்பட வேண்டும். இதற்கு உதாரணமாக நடந்து காட்டியுள்ளார் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர். இதை எமது சமூகம் பாராட்ட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்படாமலும் - பாதிப்புச் செய்தவர்கள் பாதிக்காமலும் பாதிக்காமலும் பார்க்கும் நல்ல மனம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். இந்த அனுபவம் உங்களுக்கும் தொழில் ஸ்தானத்தில் வர இடமுண்டு. திடீர் புதிய திட்டம் தொழில் ஸ்தானத்தில் வரலாம் கலகலப்பாக இருப்பீர்கள் மனம் ஆற, உடல் வேதனை தீர ஓய்வு முக்கியம். அன்பான உள்ளங்களின் ஆதரவான சொற்கள் வேண்டித் தவிப்பீர்கள். அங்குமிங்கும் ஓடி, வாசித்துப் பல விஷயமறிந்து விவாதித்துத் தெளிவு காண்பீர்கள். நோய் உபாதை, வாய்வுத்தொல்லை, வயிற்று வருத்தங்கள். வர இடமுண்டு பொன்னாங்காணி, தேசிக்காய், உள்ளி, உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். சட்டத்துறை, பிரயாணத் துறை, குருத்துறை, வர்த்தகத்துறை சம்பந்தமானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.*

### விருச்சிகம்

நிர்வாக பீடத்தில் உள்ளவர்கள் நாட்டை ஆளும் அரசியல் வாதிகளின் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்துத் தான் ஆக வேண்டும். அல்லது விபரீத விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரலாம். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். வீட்டில் தொழிலிடத்தில் பிரச்சினைகள் வந்து போகும். இடமாற்றம் ஒன்று உந்தும். ஆனால் செயற்படாது. அமைதி கலகநாஸ்தி. தெய்வீகமுள்ளவர்கள், உதவுவார்கள் அரசியல் பேசுவீர்கள், அடிக்கடி கோயில், பொது இடங்களுக்குப் போவீர்கள். நாலு வார்த்தை நாலுபேருடன் பேசினால்தான் உங்களுக்குத் திருப்தி வரும் என அடிக்கடி சிந்திப்பீர்கள். கிருமித்தாக்கம், தலைப் பாரம், யோசனை, நரம்பு விறைப்பு என்பன வரும். உஷ்ணபீடைக்கு வைத்தியம் செய்யுங்கள். பாதுகாப்புத் துறை, மின்சாரத்துறை, ரீவி, கொம்பியூட்டர் துறை, அச்சுத் தொழில்கள், வியாபாரம் போன்ற துறையிலுள்ளவர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.*

### தனுசு

இளம் சந்ததியினர் பிழைகள் விடுவது இயல்பு; அதற்காக தொடர்ந்து பிழைகளை மலியவிடுவது கண்டிக்கப்படவேண்டும். கண்டிப்புச் சரிவராவிடில்தான் தண்டிக்கப்பட வேண்டும். என்னய்யா திசை மாறிப்பறக்க ஒரு எண்ணமுண்டோ? கொஞ்சம் அக்கம் பக்கத்தவர்களைப் பாருங்கள் தொழில ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். இலாபங்களும் அதிகரிக்கும் வாகன சுகம்வரும் காலமாகும். இடமாற்றங்கள் நல்லதல்ல. இழப்புக்களைத் தரலாம். உரசல் காயங்கள், வயிற்றுப் பொருமல், குடல் வருத்தங்கள் என்பன வரும் உயர்ந்த மன்னிக்கும் உள்ளங்களால் தான் இந்த உலகம் பல நன்மைகளை அடைந்து கொண்டிருக்கிறது. என்பதைப்பற்றி அடிககடி பறைசாற்றுவீர்கள். தூர தேசத்துச் செய்திகள் நன்மைகள் தரும் காலமாகும். சொந்தம் என வந்தவர்கள் அனைவரும் சொந்தமல்ல. உங்களைத் தண்டிக்க வந்தவர்களாக ஏன் இருக்கக் கூடாது எனச் சிந்திப்பீர்கள். செய்தித்துறைகள், அச்சுத் துறைகள், வியாபாரத் துறை, போக்குவரத்துத் துறை, கமிஷன் துறையினர் போன்றவர்கள் மாற்றங்களும், நன்மைகளும் அடைவார்கள். பருப்பு வகைகளை உணவில் சேர்ப்பது நன்று.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வியாழன்.*

### மகரம்

பந்தம் பிடித்துப் பெற்ற பட்டமும், கோள் சொல்லிப் பெற்ற பதவியும், களவெடுத்துச் சேர்த்த பணமும் - பாதி வழியில் மற்றவர்கள் பரிகசிக்க ஓடி மறைந்து உருக்குலையச் செய்துவிடும் எனவே தொழில ஸ்தானத்தில் நிதானமாக முன்னேறி வாருங்கள். விதண்டாவாதம் புரிவதனால் காரிய அனுகூலங்கள் தாமதமாகலாம். எதிர்ப்பாளருடன் வாக்குக்கலகம், யோசனை அதிகரிக்கும். காசு வரவு, சகோதர உதவிகள் இருக்க இடமுண்டு. கொடுக்கல் வாங்கலால் மனஸ்தாபம் வரஇடமுண்டு. கற்பனை வளம் அதிகம் தான் ஆனால் காரியம் நிறைவேற மட்டும் காலதாமதமாகும். மனக்குழப்பம், கைகால் தாக்கம், தலைவலி, முதுகு வலி, என்பன கொடுக்கும். நாரிநோ விட்டுவிட்டு வரும். எலுமிச்சைச் சாறு, முள்ளங்கி, கோவா, முட்டை, பால் என்பன சாப்பாட்டில் சேர்த்து வாருங்கள். வங்கித் துறை, இரும்பு வேலை, நிர்வாக பீடம், பாதுகாப்பு, சட்டம், சம்பந்தப்பட்ட துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், வியாழன்.*

### கும்பம்

பதவியில் பெரியவர், பதவியில் சிறியவரின் பிழைப்பில் கைவைக்கக் கூடாது. கண்டிப்புக்கள் இருக்கலாம். பிழைகள் தவறுகளை மன்னித்து ஆலோசனை சொல்ல வேண்டுமே தவிர சிறியவரைப் பாதிப்படையச் செய்வதினால் அவரின் சாபங்களைத் தேடிக்கொள்ளக் கூடாது. எனவே தொழில் ஸ்தானத்தில் மன்னிக்கும் சுபாவத்துடன் செயற்பட்டு வாருங்கள். பொருள்வரப் புதிய முயற்சிகளைச் செயற்படுத்த முயலுங்கள். தொண்டை வரட்சி, கைகால் வீக்கம், தோல் வருத்தங்கள், பயப்பாடு, காயங்கள் என்பன வரப்பலன் உண்டு. இடமாற்றங்கள் நன்மை தரும். அகத்திக் கீரை சேர்த்துக் கொள்ளுங்கள். குடல்வருத்தங்கள் குறைந்து வரும். பிரயாணத்துறை, செய்தித்துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிஷ்ட நாள்:- திங்கள், வியாழன்.*

### மீனம்

கலகம் பிறந்து தான் நியாயம் பிறக்கும் என்பார்கள். ஆனால் கலகம் தொடர்ந்தபடி இருக்கின்றதே தவிர - நியாயம் பிறக்க வழி இல்லையே என மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் ஸ்தானத்தில் பதற்றமின்றி ஊக்கத்துடன் செயற்பட்டு வாருங்கள். எதிர்ப்பாளருடன் அனுசரித்து நடவுங்கள். பொருள் இழப்பு அல்லது ஏமாற்றம் ஏற்படலாம் திடீர் கோபங்களால் சில அலுவல்கள் நிறைவேறாமல் போகலாம். எதிர்ப்பாளருடன் கருத்து வேற்றுமைகள் வரும். இடுப்புவலி, சளிக்காய்ச்சல், இரத்தநோய், சல வருத்தம், கை கால் விறைப்பு, என்பன கொடுக்கும்பலன்கள் ஏற்படும். பெருங்காயம் சேர்க்கவும், மரக்கறிச் சூப்பு சாப்பாட்டில் சேர்க்கவும், மின்சாரத்துறை, சட்டத்துறை, கோயில் துறை போன்ற துறையினர் அதிக இலாபங்களையும் மாற்றங்களையும் அடைவார்கள். புதிய திட்டங்களால் பொருள் வரவு அதிகரிக்கலாம். ஏழரைச் சனி தாக்கம் உடல் உபாதைகளைக் கொடுக்கும். அர்ச்சனை செய்யவும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், வியாழன்.*


உ
சிவமயம்

## அகில இலங்கை இந்து மாமன்றம்

### பிரச்சினைகளும் குறைபாடுகளும்

**சகல இந்துப் பாடசாலைகளினதும் அதிபர்கள், இந்து ஆசிரியர்கள், இந்து மாணவர்கள் ஆகியோரின் கவனத்திற்கு!**

இந்துப் பாடசாலைகளுக்கோ அல்லது இந்து ஆசிரியர்களுக்கோ அல்லது இந்து மாணவர்களுக்கோ ஏதாவது பிரச்சினைகள், குறைபாடுகள் இருந்தால் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு உங்களது பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் தகுந்த ஆதாரங்களுடன் விவரமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்

*91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர்*
*மாவத்தை,*
*கொழும்பு - 02.*
*தொலைபேசி : 434990, தொலைநகல்: 344720* (c/13975)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 21 - 06 - 1934



உதிர்வு 27 - 10 - 2000

### திருமதி தர்மலிங்கம் அன்னம்மா

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி தர்மலிங்கம் அன்னம்மா அவர்கள் நோயுற்றிருந்த போதும் சிவபதமடைந்த வேளையிலும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (26.11.2000) ஞாயிற்றுக்கிழமை எமது தற்காலிக முகவரியைக் கொண்ட இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

(80695)

# தம் மொழியைப் புறக்கணிக்கும் மனப்பாங்கு தமிழர் தம் இன உணர்வை மழுங்கச் செய்யும்

இனம் என்பதென்ன? குருதி வேறுபாட்டின் அடிப்படையில் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட மக்கட் தொகுதி முன்னாளில் இனம் எனப்பட்டது. இன்று மொழியே இப்பாகுபாட்டுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. இதற்கு புறநடை உண்டாயினும் இவ்வடிப்படையிலமையும் பாகுபாடே பெருவழக்காகவுள்ளது. இதனால் தன் மொழியைப் புறக்கணிப்போர் தம் இன அடையாளத்தை இழப்பர் என்பது வெளிப்படை.

### சிந்தனைக் கருவி

தாய்மொழியை ஆளப்பயின்றதும் ஒருவரது சிந்தனை இயல்பாக அம்மொழிச் சொற்களினூடாக நிகழும். ஆனால் செவிடடூமையர்களுக்கு மொழிவழிச் சிந்தனை இல்லை. இவர்களுக்கும் சிந்திக்கும் திறன் உண்டாயினும் இத்தகைய புலன் குறைபாடற்றோரே எண்ணும் திறனால் முகிழும் கருத்துக்களை மொழிவழிப் புலப்படுத்துகின்றனர். மரபுவழிப்பட்ட இயல்பான சிந்தனை தாய்மொழியினூடாகவே நிகழுமாதலின் நுட்பமான கருத்துக்களில் தோய்வதற்கு பொருள் விளக்கும் வளமான சொற்கள் அம்மொழியில் இருத்தல்வேண்டும். மொழி மக்கள் படைப்பு; அதனை வளம்படுத்தும் பணியும் அவர்களுடையதே. அவர்களது மேம்பாடு, சிந்தனைத்திறத்தின் பாற்பட்டது. வளமற்ற மொழிநுட்பமான சிந்தனைக்குத் துணைநிற்க மாட்டாதாதலின் அம்மொழிக்குரியோரின் முன்னேற்றம் குன்றும் என்பது வெளிப்படை.

*'நாநலம் என்னும் நாணுடைமை அந்நலம்*
*யாநலத் துள்ளதூஉம் அன்று'*

என வள்ளுவர், மாந்தனினம் எய்திய மேம்பாடு மொழிவழிப்பட்டதே எனச்சுட்டிக் காட்டுகிறார்.

### மொழிவளம் – பொருள் வளம்

பொருண்மிய மேம்பாடு மொழிவளத்தின் பாற்பட்டது. இவ்வாறிருந்த விடத்தும் பொருள்வளம் சேர்ந்தாலே, மொழி வளம் சேருமென்பாருமுளர். பொருண்மிய ஏற்றத்தாழ்வு நிலையானது. ஆனால் காலத்தின் தேவைக்கு ஈடு கொடுக்கமுடியாதவாறு வளம் குன்றிய மொழி, பொருளவளம் சிறக்கத் துணைநிற்கமாட்டாது. யப்பானின் அண்மைக்காலப் பெருவளர்ச்சி இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு. பொருண்மிய மேம்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்டோரின் சிந்தனைக்கு சீராக்கப்பட்ட அவர்களது மொழி துணைநின்றது. முன்னேற்றமடைந்த மேற்புல நாடுகளின் நிலையும் இதுவே. ஆகவே மொழிவளம் சேர்க்கும் பணி, பொருள்வளம் சேரும் வரை காத்திருக்கலாகாது.

### தொடர்புக் கருவியே தானா?

மொழி சோறு போடுமா? வெறும் தொடர்புக் கருவிதானே! எம்மொழியைப் பயன்படுத்தினாலென்ன? எனத் தம் அறியாமையைப் புலப்படுத்துவோரும் நம்மிடையே உளர். ஓர் இனத்தின் தனித்தன்மையை இன்று உலக அரங்கில் நிலைநிறுத்துவது அதன் மொழியே. அன்றியும் இன உணர்வே அதன் மேம்பாட்டுக்கான கூட்டு முயற்சிகளில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டுகிறது. சிந்தனையும் கருத்தாடலும் மொழிவழி நிகழ்வன. இவை ஓரினத்தின் பண்பாட்டுக் கோலத்துக்கு ஏற்ப செயல் வடிவம் பெறும். இதனால் ஓரினத்தின் மொழி அதன் பண்பாட்டுக் கருவூலம் என்பதும் பெறப்படும். உண்மை இவ்வாறிருப்ப, தமிழ் மக்களுள் பலர் தம் மொழியைப் புறக்கணிக்கும் மனப்பாங்குடையரானதெவ்வாறு? பிற மொழிகள் எவ்வாறு வளம் பெறுகின்றன எனக் காணவிழையாததேன்? நெடுங்காலம் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்து அடிமை வாழ்வு வாழ்ந்து இன, மொழி உணர்வு கருகப் பெற்றமையாலா? தன்னலம் மிக்கு பொருளவளம் நாடி ஆண்டோர் மொழியைப் போற்றி வாழ்ந்த பழக்கத்தினாலா?

### தமிழைத் தவிர்க்கும் தமிழர்

தமிழ்மொழியில் உரையாடினால எழுதினால் தன்னின உணர்வு வந்து விடுமா எனப் பொருளற்ற சொல்லாடலில் ஈடுபடுவோரும் உளர். பன்மொழி பயின்றவராக இருப்பினும் பிறர் தூண்டுதலின்றித் தனது தேவைகளனைத்துக்கும் தன் தாய்மொழியையே பயன்படுத்துமொருவர் இவ்வாறு செயற்படுவதற்குத் தூண்டுதலாயமைவது யாது? தன்னின உணர்வே தன்மொழிப் பயன்பாட்டை ஊக்குகிறதென்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகவே தன்மொழியைப் புறக்கணிப்பாருக்கு தன்னினம் பற்றிய உணர்வு நாளடைவில் கருகும். இதனைத்தவிர்த்த வியலாது. மொழி திரிய இன அடையாளமும் திரியும். இலங்கையின் மேற்குக் கரையோரத்திலுள்ள நீர்கொழும்பு எனுமிடத்தில் வாழ்ந்த பழந்தமிழ் மக்களின் இன்றைய நிலையைச் சற்று எண்ணிப்பார்க்க.

தமிழரைப் போன்று சிங்களவரும் நீண்ட காலம் ஐரோப்பியர் ஆட்சிக்குட்பட்டிருந்தனர். அவ்வாறிருந்தும் தன்னாட்சி பெற்றதும் அனைத்திலும் தம்மொழிக்கே முதலிடம் தருகின்றனர். அதனால் சிங்களமொழி விரைந்து வளம் பெற்று வருகிறது. ஆனால் தமிழர்...? அரசமைப்பினூடு எல்லாத் துறையிலும் தமிழைப் பயன்படுத்த உரிமை பெற்றிருப்பினும் தம் மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர் நம்முள் எத்துணையர்? தமிழ்மொழி நலிய வழிகோலி ஆங்கிலத்துக்கே முதலிடம் தருகின்றனர். அச்செயலில் பெருமையுமடைகின்றனர். தமிழ் அறிந்தோரும் ஆங்கிலச் சொற்களைக் கலவாது உரையாடுவதில்லை. எழுத்திலும் இச்சிறுமையே தொடர்கிறது. தமிழில் கடிதம் எழுதி ஆங்கிலத்தில் ஒப்பமிடும் பெருமக்களுக்கும் குறைவில்லை. பெயரை எழுதும்போது முதலெழுத்தை உரோமன் வரி வடிவிலோ அல்லது அதன் ஒலியை தமிழ் எழுத்துகளிலோ எழுதும் சிறுமை அடிமட்டத்திலிருந்து கற்றவர்கள் [illegible]த கல்விக்கூடங்கள்வரை [illegible]நோயாகப் பரவியுள்ளது. வழி காட்டவேண்டியவர்களே வழி தவறினால் தமிழுணர்வு மக்களிடையே எவ்வாறு தலைதூக்கும்? தன்மொழியைப் புறக்கணித்து பிற மொழிக்கு முதலிடம் தருதல் பெருமையென மயங்குவோர் எந்தத் தலைமுறையில் இன உணர்வுக்குக் கைகொடுக்க முடியும்? பல தலைமுறைகளாக நம் குருதியில் ஊறிவிட்ட அடிமை உணர்வும், தாழ்வுமனப்பாங்கும் நம்மை விட்டகலும் நாள் என்றுமே வராதோ?

### வாணிகத் துறையும் தமிழும்

புதிய உற்பத்தி, வாணிகம் ஆகிய துறைகளில் ஈடுபடுவோருட் பலர் தம் முயற்சி நற்பலனளிக்க தமிழ் துணைநிற்பதில்லை என்னும் கருத்துடையர். தன்மொழி தாழ்வானது, பிறமொழி உயர்வானது என்னும் தவறான எண்ணமே இம் மனநிலைக்கு அடிப்படை. சிங்க எழு என்னும்

**கங்காதரன்**

தமிழ்க் கிளைமொழியினடிப் பிறந்து பாளி, சமஸ்கிருதச் சொற்களைப் பெருமளவில் உள்வாங்கி வளர்ந்த் சிங்கள மொழியில் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் ஒலித்திரிபோடு பயின்று வருகின்றன. அதன் இலக்கணம், சொற்றொடர் அமைப்பு என்பனவும் தமிழ் மொழியின் வழிப்பட்டவை. அவ்வாறிருந்தும் வாணிகத் தேவைகளுக்குத் தம் மொழிச் சொற்களையே அவர்கள் எடுத்தாளுகின்றனர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் விளம்பரம் வெளியிடும் போதும் தம் மொழிச்சொற்களையே அவர்கள் எடுத்தாளுகின்றனர். சதோச, லக்சல, சலுசல, பத்தும்விமன, ரிதீ ரேகா முதலிய சொற்கள் நம்மிடையே பயில்வதை நோக்குக. இவ்வாறே மேற்புல நாட்டு உற்பத்திகளின் வாணிகப் பெயர்களும் உற்பத்தி செய்வோர் மொழியிலேயே உள்ளன. சீனா, யப்பான், கொரியா முதலிய நாடுகளின் நிலையும் இத்தகையதே. ஆனால் தமிழ்ப்பெருமக்களோ தமது அடிமை மனப்பாங்கிலிருந்து விடுபட விரும்பாமல் ஆங்கில அல்லது சமக்கிருதச் சொற்களை நாடி ஓடுவர். இந்நிலை தன்மான உணர்வின்மையின் புலப்பாடு ஆகாதோ?

### தமிழைத் தாழ்த்தும் தமிழன்

உலக முதன்மொழி, ஒலிப்பெளிமை மிக்க செவ்விய மொழி என மொழியியல் அறிஞர்களால் விதந்தோதப்படும் நம் மொழி தாழ்நிலை எய்தியதெங்ஙனம்? நம் மக்களின் மொழிப் பற்றின்மையே இதற்குத் தலையாய காரணம். ஆரிய மயமாக்கலால் தமிழ மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் விளைந்த கேடு அளப்பரியது. இன்றும் இத்தீவினை பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது. இதற்குக் கைகொடுக்கும் தமிழறிஞர்களும் நம்மிடையே உளர். தமிழையும் தமிழரையும் சிறுமைப்படுத்தும் பாங்கில் பொய்யும் மெய்யும் கலந்து மக்களை மயக்கும் நூல்கள்பல எழுதி வெளியிட்டதோடமையாது, தமிழகத்தில் வெளியிடப்பட்ட ஒரு தமிழ்ப்பேரகர முதலியின் பதிப்பாசிரியராகவிருந்து பன்னூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்களை உண்மைக்கு மாறாக சமக்கிருதத்திலிருந்து பிறந்தவையெனக் காட்டப் பெருமுயற்சி செய்த தமிழகத்துப் பேராசிரியர் ஒருவரின் வழித்தோன்றல்கள் சிலர் இன்றும் நம்மிடையே உள்ளனர். தமிழின் மறுமலர்ச்சி, தமிழ்மொழி ஆய்வு ஆகியவற்றில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்களை மிகத் தரக்குறைவாக மதிப்பீடு செய்து கருத்துக்கள் வெளியிட்ட இலக்கியவாதியான ஒரு தமிழ்ப் பேராசிரியரும் நம்மிடையே வாழ்ந்தார். ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது தூய தமிழ்ச் சொற்களை நாடி ஓடி அல்லற்பட வேண்டியதில்லை. சமக்கிருதச் சொற்களை எடுத்தாளலாம் என மற்றொருவர் பொது மேடையிற் கருத்து வெளியிட்டதாகச் செய்தி இதழ்கள் கூறின. பொருத்தமான தமிழ்ச் சொல் கிடைக்காவிடின் மொழிபெயர்க்க வேண்டிய ஆங்கிலச் சொல்லையே தமிழ் ஒலிப்போடு எடுத்தாளலாமே! மூன்றாவது மொழியான சமக்கிருதத்துக்கு ஏன் முதன்மை தரவேண்டும்? தமிழின் மேம்பாட்டுக்காக உழைத்தவர்களை எள்ளி நகையாடியதும், சமக்கிருதத்துக்கு முதன்மை தருமாறு கூசாது பொது மேடையிலிருந்து வேண்டுகோள் விடுப்பதும் எந்நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை? தெளிந்த சிந்தையுடையார் இவற்றை மதிப்பீடு செய்வார்களாக.

> ....அடிமை மனப்பாங்கில் இருந்து விடுபட விரும்பாமல் ஆங்கில அல்லது சமக்கிருதச் சொற்களை நாடி ஓடும் தமிழர்களின் தன்மான உணர்வு எங்கே.....?

## பிற மொழிக்கு முதலிடம் தருதலே பெருமை என்னும் மயக்கம் ஏன்?

### வளம் சேர்க்க வழி

தன் மொழி உணர்வு மேலோங்கினாலன்றி அதற்கு வளம் சேர்க்கும் எண்ணம் பிறக்காது. தமிழர் தம் தேவைகளனைத்துக்கும் தமிழ் மொழியையே எடுத்தாள்வது என உறுதி பூண்டு, செயலில் ஈடுபடின் சில பத்தாண்டுகளுள் நம் மொழி வியப்பூட்டுமளவுக்கு வளம் பெறும். உலக வழக்கற்று மூலையில் முடங்கிக் கிடந்த எபிரேய மொழி, இன்று அடைந்துள்ள வளர்ச்சி பெரு வியப்பூட்டுவது. இசுரேல் நாடு பிறந்ததும் அதன் குடிமக்களான யூதர்கள் தம் மொழியான எபிரேயத்தை ஆட்சி மொழியாக்கினர். அரசியற் செயற்பாடுகளில் மட்டுமன்றி மக்கள் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் அம்மொழி பயன்படுத்தப்பட்டது. புதிய சொற்கள் படைக்கப்பட்டன; வேண்டுமிடத்து பிறமொழிச் சொற்களும் ஒலித்திரிபோடு உள்வாங்கப்பட்டன. அறிவியற்றுறை ஆய்வுகளுக்கும் யூதர் தம் மொழியையே பயன்படுத்துகின்றனர். மிகக் குறுகிய காலத்தில் மொழியோடு மக்களும் நாடும் எய்தியுள்ள பெரு வளர்ச்சி ஓருவரலாறாகவுள்ளது. புறக்கணிக்கப்பட்டிருந்த இம் மொழி இத்துணை வளம் பெறமுடியுமாயின் பன்னெடுங்காலமாக புலவரவை கண்டு மெருகேறி வளம்பெற்ற தமிழ்மொழி மீண்டும் தலைநிமிர்வதற்கு எத்துணைக் காலமாகும்? ஆகவே நாம் செய்ய வேண்டுவது யாதென இங்கு விளக்கிக் கூறுதல் வேண்டா. மொழி வளம் சேர்க்கும் பணி நமக்குப் பெருமை சேர்ப்பதோடு இனஉணர்வு ஆழவேரோடுவதற்கும் வழிகோலும்.

இம்முயற்சிகளுள் சில எவ்வாறு அமைதல் வேண்டுமென இனிக்காண்போம். ஒரு கருத்தைப் புலப்படுத்த பொருளுள்ள தன்மொழிச் சொற்கள் இருப்ப, அவற்றைப் புறக்கணித்துப் பிறமொழிச்சொற்களை எடுத்தாளுதலைத் தவிர்த்தல் வேண்டும். இதனைக் கடைப்பிடிக்கத் தவறியமையாலேயே பன்னூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் வழக்கிறந்துள்ளன. சான்றுக்கு ஒன்று காண்போம். இன்று போர்ச்சூழ் நிலையில் நாம் வாழ்கின்றோம். அன்றாடம் 'போர்' பற்றிய செய்திகளைச் செவிமடுக்கின்றோம். ஆனால் போர் எனும் சொல் புறக்கணிக்கப்பட்டு 'யுத்தம்' என்னும் பிறமொழிச் சொல்லே பெரும்பாலும் எடுத்தாளப்படுகிறது. இது தொடரின் 'போர்' என்னும் எளிய தமிழ்ச் சொல் விரைவில் வழக்கற்றுப்போகும். இவ்வாறு நிகழாது காப்பதில எழுத்தாளர்களுக்கும், செய்தி இதழ், சஞ்சிகை என்பனவற்றுக்கும் பெரும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்தை உணர்வாரா?

சுதந்திரத்திற்குப் பின்னர் மாறி மாறி இந்த நாட்டின ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் இந்நாட்டிலுள்ள தமிழ மக்களின் உரிமைகளைப் பறித்தெடுப்பதில் போட்டி போட்டுச் செயற்பட்டனர் –

பண்டா – செல்வா ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால், தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்றோ தீர்ந்திருக்கும் –

தமிழ் மக்கள் மேற்கொண்ட சாத்வீக நடவடிக்கைகள் பலனளிக்காத பட்சத்தில் – தமிழ் மக்களுக்குக் காலத்துக்குக் காலம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டதால் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர் –

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நியாயமான முறையிலே தீர்த்துவைக்கப்பட்டால், நாட்டைப் பிரித்தே ஆகவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தமாட்டார்கள் –

போரினால் தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களுமே பாதிக்கப்படுகின்றார்கள். இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுப் போர் நிறுத்தப்பட்டால், உயிரழிவும் பொருளழிவும் நீங்கும்; சேமிக்கப்படும் பணத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்–

விடுதலைப் புலிகளுடன் மனம்விட்டுப்பேசி ஓர் உடன்பாடு காணப்பட்டால் மட்டுமே திருப்தியான தீர்வும் நிரந்தரமான சமாதானமும் சாத்தியமாகும் –

தமிழ் மக்கள் - தமிழ்த் தலைவர்கள் - கடந்த சில ஆண்டுகளாகச் சொல்லிவருகின்ற இந்தக் கருத்துக்களைக் கடந்த சில மாதங்களாகச் சொல்லி வருகின்றார்கள் சிங்களத் தலைவர்கள் பலர்!

மாறி மாறி இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, தமிழ்மக்களுக்கு அநீதி இழைத்தவர்களினதும் அதற்குத் துணைபோனவர்களினதும் இன்றைய வாரிசுகளும் இப்படிச் சொல்லி வருகின்றார்கள்!

இனப்பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை கொண்டுள்ள வெளிநாட்டினரும் இப்படிக் கூறிவருகின்றார்கள்!

இருந்தும் -

நியாயமான தீர்வு என்பது நிறைவேறாத இலட்சியமாகவே இருக்கின்றது!

சமாதானம் என்பது சாத்தியமாகாத ஒன்றாகவே இருக்கின்றது!

காரணம் என்ன?

ஆறுதலாக - ஆழமாக - ஆராய்ந்து பார்த்தால், சிங்கள, தமிழ் தலைமைகளின் இருவேறு மனப்பாங்குகள் தம்மை இனங்காட்டிக்கொள்ளும்!

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவதில் அந்தரங்கசுத்தி என்பது சிங்களத் தலைவர்களிடம் சிறிதுமே இல்லை!

தமிழ மக்களின் தன்மானத்தையும் விடுதலையையும்விட, தம் 'சொந்த மான'த்தையும் சொகுசு வாழ்க்கையையும் கட்சியின் முக்கியத்துவத்தையும் கட்டிக் காக்கவேண்டும் என்ற பேரவா தமிழ்த் தலைவர்கள் பலரிடம் தாராளமாகவே உண்டு!

கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மறுக்கப்பட்டு மறக்கப்பட்டமையும் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டமையும் முன்னதற்கு உதாரணங்கள்!

ஐயந் திரிபற இடமின்றி, எவ்வித முரண்பாடும் இன்றி, தமிழ்மக்களின் நியாயமான உரிமைகள் அனைத்தையும் வரையறுத்து ஒரே குரலில் விடாப்பிடியாக வலியுறுத்தி வென்றெடுப்பதற்கு வாய்ப்பாக ஒரே அணியிலே திரளத் தயங்குவதும், பதவிக் கதிரையிற் பட்டாபிஷேகம் செய்யப்படுவதற்காக பலிவாக விலைபோகத் தயங்காதிருப்பதும் பின்னதற்கு உதாரணங்கள்!

இந்த நிலையில் –

இனப்பிரச்சினையைத் தீர்த்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் நோர்வே நாடு ஈடுபட்டுள்ளது.

இவ்வேளையில், தமிழ் மக்களுக்குச் சில விஷயங்களைத் தெளிவாக்குவது அவசியமாகிறது

உரிமைகளைப் பறித்தெடுத்தும் அவற்றை வழங்கத் தயங்கி வருவதும் - சிங்களப் பெரும்பான்மை!

### மணிமண்டபம்

உரிமைகள் பறிக்கப்பட்டு, அதனால் உருக்குலைந்து வருவது - தமிழ்ச் சிறுபான்மை!

பேரளவில தமிழராய், பேச்சளவிலும் செயலளவிலும் சிங்களவராயிருக்கும் வெளிவிவகார அமைச்சர் சிங்களப் பெரும்பான்மைக்காகவே குரல் கொடுப்பார்!

தமிழ்ப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு அரசின் ஓர் அங்கமாகவே இணைந்துவிட்டவர்களும் அரசின் குரலையே எதிரொலிப்பர்!

கட்சி நலனையும் சுயலாபத்தையும் பின்தள்ளிவிட்டு, தமிழ் மக்களின் அபிலாசைகள் இவை தாம்; உரிமைகள் இவை தாம் என்பதை எவ்வித பிசிறுமின்றி எடுத்துரைத்து நீதியை நிலைநாட்டுவதற்காக - நியாயமான உரிமைகளை நிறைவாகப் பெறுவதற்காக அனைத்துத் தமிழ்த் தலைவர்களும் 'களத்துப் பெருந் தம்பியாரும்' ஒன்றுசேராவிட்டால் –

மேற்சொன்ன தனது 'ஊதுகுழல்களை' ஓங்கி ஒலிக்கச் செய்து தமிழரின் குரலாக அதைத் திரித்துக்காட்டி அரைகுறைத் தீர்வு ஒன்றைத் தமிழ்மக்கள் மீது கட்டி அடிப்பதில் அரசு வெற்றி காணக்கூடும்!

ஆபத்தை உணர்ந்து அதைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தமிழ்த் தலைவர்கள் எடுப்பார்களா?

**- சித்தன்**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S.M. சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்), நிதியம்பனை, மல்லாகம். (C/13754)

**KONICA COPY MACHINE, NATIONAL** குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.அருள்ராஜன்,இல.111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (80802)

**England** தயாரிப்பான **INCUBATOR** (கோழிக்குஞ்சு பொரிக்கும் சாதனம்), அதற்குரிய பெட்டி, முட்டை வைக்கும் தட்டு, புதிய **(CHINA)** வயலின் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.திருக்குமரன், வழக்கம்பரை வீதி, தொல்புரம். (80866)

சிறந்த பாவனையில் இருந்த நல்ல நிலையிலுள்ள சுப்பகப - 90 லான்சர்-மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு . தொடர்பு: இல.81, தாவடி-மானிப்பாய்வீதி, (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அண்மையில்) (80892)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய வடக்கு,விளாத்தியடி வீதியில் சகல வசதியுடன கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காவலன் திருமண சேவை, மருதனார் மடம வீதி, உரும்பிராய சந்தி.(80836)

நெல்லியடியில் வதிரிச்சந்தி, திக்கம் வீதியில வதிரி உல்லை யனம்மன கோயிலுக்கு அருகில் உள்ள யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையாரின் வீட்டுக்கு அருகில் இரண்டு பரப்பு காணியுடன் சேர்ந்த புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபா வத்தை, வதிரி, கரவெட்டி. (80878)

## மணமகள் தேவை

நோர்வே நாட்டில் அரச வைத்திய சாலையில் பணிபுரியும், கேட்டை நட்சத்திரம், வயது 35, உயரம் 5'3", சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு படித்த, பண்பான, அழகுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் கொழும்பு வந்து மணம் செய்து அழைத்துச் செல்வார். சீதனம் நேரில் பேசித் தீர்க்கப்படும். தொடர்புக்கு: விளம்பர இல. 1145, மே/பா உதயன். (80848)

## தவறிவிட்டது

வையாபுரி கமலாம்பாள் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல.415101910x)விசேட அடையாள அட்டையும் 16.11.2000 அன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆலய கந்தோரில் அல்லது சுவிஸ்சோ கோல்ட் கட்டிங் ஜுவலர்ஸ்,44/1, யாழ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (80843)

ஐயனார் கோயில் வீதி,வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியை உடைய மயில்வாகனம் தயாபரன் என்பவரது தேசிய அ. அ. 22-11-2000 அன்று சிவப்பிரகாசம் வீதிக்கும் கோம்பையன் மணல் மயானத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் இராஜேந்திரம், மதுபானசாலை, நாச்சிமார் கோயிலடி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும் (80867)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர்வளவு). (80790)

**Broiler** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80853)

## நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன **ALSATION** நாய்க் குட்டிகள் (கறுப்பு நிறம் உட்பட) விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80852)

## கோழிக்குஞ்சுகள் விற்பனை

16நாள் முதல் 26நாள் வரையிலான பல இனக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே.வி.சாமி, 131/1,அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (80884)

## காணாமற் போய் விட்டது

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் வீதியிலுள்ள ஒடை ஒழுங்கை, 4ஆம் இலக்க வீட்டில் 19.11.2000 ஞாயிறு இரவு லுமாலா (இல.55566131) பெண்கள் சைக்கிள் காணாமல் போய்விட்டது. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80885)

## பிறிமா குஞ்சுகள்

**Prima** இன சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் மிக விரைவில் விநியோகம் செய்ய இருப்பதனால் முன் பதிவுகள் ஏற்கப்படுகின்றன. தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (80883)

## நோயாளர் கப்பல் சேவை இடைநிறுத்தம்

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்று வந்த நோயாளர் கப்பல் சேவை இனி ஜனவரியிலேயே இடம்பெறவிருக்கின்றது.

கடற் கொந்தளிப்புக் காரணமாக இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தம்மொழியைப் புறக்கணிக்கும்.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்கு உண்டு. தமிழ்ச்சொற் பயன்பாட்டை ஊக்குவதில் கல்வி நிலையங்களுக்குப் பெரும்பொறுப்புண்டு. தமிழ் வளம்மிக்க மொழி. ஒருகால் நம்மக்கள் சமக்கிருதச் சொற்கலப்புக்கு வழிவிட்டமையால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ச்சொற்கள் வழக்கிறந்துள்ளன. வழக்கிறந்தவிடத்தும் அவை தமிழ்மொழிக்குரியவை. ஆகவே மீண்டும் அவற்றுக்கு வாழ்வளித்தல் எளிது. பயன்படுத்தத் தொடங்கினால் மிகக்குறுகிய காலத்துள் அவை மக்கள் நாவில் இயல்பாகவே பயிலத்தொடங்கிவிடும். சில போது புதிய கருத்துகளுக்கு வேண்டியனவற்றையும் இவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். இவற்றின் வேர்ச்சொற்களோடு பொருத்தமான முன்னொட்டு, பின்னொட்டு என்பனவற்றை தேவைக்கேற்ப இணைத்து புதிய சொற்களைப் படைக்கலாம். பிறமொழிச் சொற்களை மொழி பெயர்க்கும் போதும் இவ்வொழுங்கைப் பின்பற்றலாம். முடியாவிடத்து புலப்படுத்த வேண்டிய கருத்தை உள்வாங்கி முற்றிலும் புதிய சொல்லைப்படைக்கலாம் இவற்றால் விரைந்து மொழி வளம் பெறும். இவற்றுள் எதுவும் கைகூடி வராவிடத்து பிறமொழிச் சொல்லை தமிழ் ஒலிப்புக்கேற்ப ஒலித்திரிபோ டெடுத்தாளலாம்.

சமக்கிருதச் சொற்கள் பல பன்னெடுங்காலமாகத் தமிழில் பயின்று வருகின்றன. பிற மொழிச் சொற்கள் பிறமொழி எழுத்தின்றியே தமிழில் வழங்குதல் வேண்டும் எனத் தொல்காப்பியர் முதல் பவணந்தி முனிவர் ஈறாக உள்ள இலக்கணியர் வரையறுத்துள்ளனர். ஆகவே சமக்கிருதச் சொற்களுள் சிலவற்றின் ஒலிப்புக்காகத் தமிழ் நெடுங்கணக்கிற் சேராத கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். இதே ஒழுங்கு பிறமொழிச் சொற்களின் ஒலிப் பெயர்வுக்கும் பொருந்தும்.

தமிழர் வழிபடும் கோயில்களிலும், தமிழர்கள் பின்பற்றும் இந்து மதச் சடங்குகளிலும், தமிழல்லாத மக்களுக்குப் புரியாத மொழி பயன்படுத்தப்படல் தமிழினத்துக்கு எவ்வகையிலும் பெருமை சேர்க்காது. தமிழ் பக்தி உணர்வைக் கிளற வல்ல இன்னோசை மொழி. இத்தகைய மொழி வழிபாட்டிடங்களிலும் சடங்குகளிலும் தீண்டாமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலை தமிழருக்குப் பெருமை சேர்க்குமா? எண்ணிப்பார்க்க.

## தமிழகத் தமிழர்

தமிழகம் தமிழைக் கைவிட்டு விடுமோ என ஐயுற வேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் கல்வி பயிற்றப்படுதல் வேண்டுமெனத் தமிழகச் சட்டமன்றம் அண்மையில் ஒரு சட்டம் இயற்றியது. ஆங்கிலமொழி மோகத்தால் அலைப்புண்ட தமிழர்கள் சிலர் ஒன்று கூடி நீதிமன்றினூடு இதற்கெதிரான ஆணை பிறப்பித்துள்ளனர். இது எதனைக் காட்டுகிறது? அம் மாநிலத் தமிழர்களிடையே தன் மொழிப்பற்று குன்றி வருவதையன்றோ! அங்கு வெளியாகும் செய்தி இதழ்கள், சஞ்சிகைகள் முதலியவற்றுள் பல இதனை ஊக்குவித்கின்றன. மக்கள் நாவிலும் தெளிவான தமிழைக் காணமுடியாது. ஆங்கிலச் சொற்கலப்பின்றிப் பேச, எழுத அவர்கள் அறியார். அண்மையில் தமிழகம் சென்று மீண்ட நம் தமிழறிஞர்கள் சிலர் இதற்குச் சான்று பகர்வர். இந்த இழிநிலை அங்குள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ்ச் சங்கம் முதலிய அமைப்புகள் ஆற்றவல்ல பயனுள்ள பணி யாது? உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபடுவதற்கு, தமிழை வெறுக்கும் செல்வாக்குள்ள தமிழ் அறிவாளிகள் வழிவிடுவார்களா?

ஆகவே இன உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழனே தமிழ் வளர்க்கும் பெரும் பொறுப்பையும் ஏற்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இதற்கு முகம் கொடுக்கத் தமிழ்ப் பற்று நம்மிடையே ஆ, வேரோடுதல் வேண்டும். மொழிப்பற்று இனப்பற்றுக்கு அடிக்கல். இதன் நேரடி விளைவு யாதாகும் என ஈண்டு கூற வேண்டியதில்லை.

*


உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

## முகாமைப் பேரவை ஆண்டுப் பொதுக் கூட்டம்

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டம் சம்பந்தமான அறிவித்தல் மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது சம்பந்தமான அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக மாமன்றத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்

*91/5, சேர் சிற்றம்பலம்*
*ஏ. கார்டினர் மாவத்தை,*
*கொழும்பு - 2.*
*தொலைபேசி: 434990, தொலைநகல்: 344720* (c/13976)



உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

## சேதமடைந்த ஆலயங்களின் விவரங்கள்

*சகல இந்து ஆலயங்களின் அறங்காவலர்களினதும் கவனத்திற்கு!*

கடந்த காலங்களில் எமது நாட்டில் நடந்த அனர்த்தங்களால் சேதமடைந்திருக்கும் ஆலயங்களின் விவரங்களையும், அவை திருத்தப்பட்டிருந்தால் திருத்தம் செய்யப்பட்ட விவரங்களையும், இன்னமும் திருத்தப்படாமலிருந்தால் திருத்தம் செய்யப்பட வேண்டிய விவரங்களையும் தகுந்த ஆதாரங்களுடன் உங்களால் இயன்ற விரைவில் எமக்கு அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்

*91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர்*
*மாவத்தை,*
*கொழும்பு - 2.*
*தொலைபேசி: 434990, தொலைநகல்: 344720.* (C/13977)



# விற்பனையாகின்றது பணம்

## பொருளியல் நூல்

ஆசிரியர்: வே. கருணாகரன்

(80881)



## சன்மானம் வழங்கப்படும்

இல. 58, லோட்டஸ் வீதியில உள்ள எனது பாக்குக் களஞ்சியம் உடைக்கப்பட்டு 300 kg பாக்கு களவாடப்பட்டுள்ளது. விற்பனைக்கு வந்தால் இது பற்றிய தகவல் தருவோருக்கு ரூபா 5000/- சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:

S. சுந்தரலிங்கம்,
*வெற்றிலைக்கடை,*
*திருநெல்வேலி மார்க்கற்.* (80886)


# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| **24.11.2000 (வெள்ளிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-** | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | 920,545 |
| 1. அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்-யா/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 1050 |
| 2. வர்த்தக சங்கம் - உடுப்பிட்டி | 2000 |
| 3. அ. றொபின்சன் - பாசையூர் | 100 |
| 4. பணியாளர்கள் - பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம் | 5525 |
| 5. அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் - யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம். | 1500 |
| 6. பிரதம பொறியியலாளர் - நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அ/தி திணைக்களம் - யாழ்ப்ணம் | 5000 |
| மொத்தம் | 935,720 |

## அம்பிகை கல்வி நிலையம்

[சங்கரத்தைச்சந்தி - வட்டுக்கோட்டை]

### 2001-க்கான புதிய வகுப்புகள்

**ஆரம்பம்: 11-12-2000**

1) 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு
ஆசிரியர்: திரு. கைலநாதன்
2) ஆண்டு 11 — ஆண்டு 10-க்கான
சகல பாடங்களும்
3) ஆண்டு 1 முதல் ஆண்டு 9 வரை வகுப்புகள்.
4) சங்கீதம் நடனம் போன்ற கலை வகுப்புகள்.

— நிர்வாகி

சங்கரத்தைச்சந்தி,
வட்டுக்கோட்டை. [80888]

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல் - 2000

**தண்ட அறவீட்டிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு**

2000 ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 01 - 01 - 2001 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்துக்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும்
குடியிருப்புக் காணிகள் — 15 %
ஏனைய காணிகள் — 20 %

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23 - 11 - 2000 (சி-13981)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவில்



### அமரர் லோகேஸ்வரி இராஜசேகரம்

(ஆங்கில ஆசிரியை, யா/ வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

மலர்வு 30 — 05 — 1954
உதிர்வு 27 — 10 — 2000

உன்பாடு நிம்மதியாய்த் தூங்கி விட்டாய்
உளப்பாடு பெரும்பாடாய்த் தூக்கம் இன்றி
அன்போடு பழகியதை எண்ணி எண்ணி
அழுகின்றோம் துடிக்கின்றோம் எங்கே போனாய்?

இன்று (26 — 11 — 2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் பொ. இராஜசேகரம்,
பிள்ளைகள் இ. பிருந்தா, இ. கருணா.

பாடசாலை வீதி,
மாதனை,
பருத்தித்துறை. (சி/13931)

## வலுவிழந்த மாணவர்களுக்கு கருத்தரங்கு

கொழும்புத்துறை, நவ. 26

விழிப்புலன் வலுவிழந்த மாணவர்களுக்கான கற்பித்தல் தொடர்பான கருத்தரங்கின் தொடர்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ''விழிப்புலன் வலுவிழந்த மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாடசாலைகள் கவனிக்க வேண்டிய விடயங்கள்'' எனும் பொருளில் வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா-மகேந்திரன் உரை நிகழ்த்துவார்.

(இ-30)

## சட்டவிரோத மின் பாவனை

அரியாலை, நவ. 26

நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களால் இரவு வேளைகளில் இப்பகுதியில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-17)

## 3 மாதங்கள் கடந்தும் சம்பளம் இல்லை

வலி. கிழக்கு, நவ. 26

கடந்த செப்ரெம்பர் மாதம் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் பெற்ற 235 பேருக்கு இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது —

செப்ரெம்பர் 18 ஆம் திகதி இந்த 235 பேரும் யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ-180)

## வெள்ளம் தேங்குவதைத் தடுக்க நடவடிக்கை

கொக்குவில் நவ. 26

நல்லூர் பிரதேச சபையால் அண்மையில் புனரமைக்கப்பட்ட வீதிகளில் வெள்ளம் தேங்குவதைத்தடுக்கும் முயற்சிகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் கொக்குவில் உடையார் ஒழுங்கையின் இருமருங்கிலும் வீதியைவிட உயர்வாக உள்ள மண் மேடுகள் வெட்டி உழவுஇயந்திரங்களில் ஏற்றி அப்புறப்படுத்தப்படுகின்றன. (இ-69)

## அறநிதிய உதவி குறித்துத் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 26

சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பிறந்த நாள் அறநிதியத்தினால் ஏழை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட உள்ளன.

குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளில் இருந்தும் — 2001 ஆம் ஆண்டில் ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும்வறுமைக் கோட்டில் உச்ச நிலையில் உள்ள கல்வியில் ஊக்கமும் திறமையும் உடைய மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல கல்வி வலயங்களுக்கும் அறநிதியக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ம-6-10-30)

## அம்பிகை கல்வி நிலையம்

(சங்கரத்தைச் சந்தி - வட்டுக்கோட்டை)

### விசேட ஆங்கில பயிற்சி வகுப்புகள்

பிரபல ஆங்கில ஆசிரியர் திரு. R. தெய்வேந்திரம்
வட்டுக்கோட்டை.

**நடத்தப்படும் பாடநெறிகள்**

1) க பொ த. [சாதாரண] பிரிவு-மாணவர்களுக்கு
2) க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு
3) பல்கலைக்கழக மாணவர்களுக்கு
4) Spoken English - வெளிநாடு செல்பவர்களுக்கு

குறுகிய காலத்தில் பயிற்சிகள் நிறைவு செய்யப்படும்.

**ஆரம்பம்: 01-12-2000** காலை 8 மணி (பு. நே)

நிர்வாகி

சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை. (80887)

## புனித நிக்கொலஸ் மாமுனிவரின் திருவிழா நினைவு கூரல்

மிருசுவிலில் கோயில் கொண்டுள்ள புனித நிக்கொலஸ் மாமுனிவரின் திருவிழாவை முன்னிட்டு இடம் பெயர்ந்து சில்லாலையில் வாழும் மிருசுவில் கத்தோலிக்கர்கள் சில்லாலை பங்குத் தந்தையின் அனுசரணையுடன் விசேட வழிபாடுகளை சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் நடத்த ஒழுங்கு செய்துள்ளனர். வழிபாடுகளின் விவரம் பின்வருமாறு:

★ 27-11-2000 முதல் 04-11-2000 வரை (தினசரி)
மாலை 5.00 மணி செபமாலையும், நவநாள் பிரார்த்தனையும்

★ 05-12-2000 மாலை 4-30 மணி
முன்னாயத்த வழிபாடும், திருப்பலியும்


★ 06-12 2000 காலை 7.30 மணி
நன்றித் திருப்பலி

வழிபாடுகளில் கலந்து இறையாசி பெற பக்தர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்பெயர்ந்து வாழும்
புனித நிக்கொலஸ் ஆலய மக்கள்
சில்லாலை,

(80889)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னக்குட்டி கந்தசாமி

(பிரபல புகையிலை வியாபாரி)

மலர்வு 1927 - 01 - 15
உதிர்வு 1999 - 12 - 08

**திதி: 2000-11-26**

அன்புள்ளம் கொண்டு அணைத்திடுவாய்
இல்லை என்று சொல்லாமல் சிரித்திடுவாய்
ஊரெல்லாம் உன் பெயர் கேட்கிறதே!
ஏனப்பா எமை விட்டு மறைந்தீர்?
ஓராண்டு சென்றாலும் உம் நினைவு
எமை விட்டு அகலாது!

உம் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (80828)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அரியகுட்டி

மட்டுவில் தெற்கு சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அரியகுட்டி அவர்கள் நேற்று [25-11-2000] சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வியாளாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கதிரவேலு, கிருஷ்ணபிள்ளை, யோகம்மா, வன்னியசிங்கம், கமலாதேவி, பரமநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [25-11-2000] சிறுப்பிட்டி காளையன் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. நமசிவாயம்(மருமகன்)
அம்பாள் அரிசி ஆலை,
மட்டுவில்.

தற்காலிக முகவரி:
க. குமாரவேலு
சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

(80891)

## திருமதி சரஸ்வதி நடராசா

அரியாலையைப் (சாத்திரியார் வேலை) பிறப்பிடமாகக் கொண்ட அப்பம்மா என்று அழைக்கப்பட்ட திருமதி சரஸ்வதி நடராசா 24-11-2000 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கனகம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற இலட்சுமியின் சகோதரியும் முத்தையா நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தையா – மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் மைத்துனியும் சிவகுருநாதன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற சிவராசா, பவா என்றழைக்கப்படும் சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26-11-2000) மாலை 4.00 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நடராசா
(கணவன்)

சாத்திரியார் லேன்,
அரியாலை.

(80904)

## பேரம்பலம் சிவகுமாரன்

சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சிவகுமாரன் 24-11-2000 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம், யோகம்மா ஆகியோரின் மூத்த மகனும், விஜிதாவின்(பிரான்ஸ்) அன்புக் கணவரும் லக்ஸ்மன் (பிரான்ஸ்), சமீசன் (பிரான்ஸ்), வினிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். லோகநாதன் (துரைராசா), செல்வராணி ஆகியோரின் அன்பு மருமகனும் வனிதா, உதயகுமார் (பிரான்ஸ்), தமயந்தி (பிரான்ஸ்), மகிந்தகுமார் (பிரான்ஸ்), ஈஸ்வரி (கொழும்பு), கணேஸ்குமார் (முகாமைத்துவ வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகசபை, சுதாராணி (பிரான்ஸ்), சந்திரகுமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ராஜி, சுயா, ரேகா, கரிகாலன் ஆகியோரின் அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பே. கணேஸ்குமார்
(சகோதரன்)
70, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

P. Sivakumaran
A.p P.T. 39,
10 Chmin De Bagattelle,
31100, Touleuse,
FRANCE.
T. P. 0033561430204

(80907)

## திருமதி வாலாம்பிகை பொன்னம்பலம்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வாலாம்பிகை பொன்னம்பலம் நேற்று (25-11-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (Station Master) அன்பு மனைவியும் சரோஜினிதேவி (Australia), யோகரட்ணம், காலஞ்சென்ற அழகுரட்ணம், காலஞ்சென்ற யோகேந்திரன், இந்திராணி (America), பத்மாதேவி, லலிதாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீபத்மநாதன், சந்திரா, ராஜலக்ஷ்மி, வாமதேவா, சச்சிதானந்தம், சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபா, ரஜீவன், நிருபா, யாதவன், நிலானி, நிருஷன், வினோதினி, விஜிதன், நிருபன், ஹரிகரன், ராகுலன், காயத்ரி, சகிரோா, சியாமளன், சகிலா, சாமிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(25-11-2000) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
P. யோகரட்ணம் (மகன்)
I. சண்முகசுந்தரம் (மருமகன்)
T. சச்சிதானந்தம் (மருமகன்)

52A, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி.

(80911)

## மாணவருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட இறுதி ஆண்டு மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பொதுக் கலை மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## வருகை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 26

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து உதவித் தொகையைப் பெறும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களைத் தாங்கள் கற்கும் பாடசாலையில் இருந்து வரவுச் சான்றிதழுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் இணுவில் மத்திய கல்லூரியிலும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நெல்லியடி மகாவித்தியாலயத்திலும் இயங்கும் கல்லூரி அலுவலகங்களில் பெயர்களைப் பதிவு செய்யும்படி அதிபர் தெரிவித்துள்ளார்.

[ம-30]

## உதைபந்தாட்டப் போட்டி

வலி. வடக்கு நவ. 26

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ. தம்புராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழக எதிர் ஏழாலை இளம் தென்றல் விளையாட்டுக் கழகம்.

(ம-86)

# மரண அறிவித்தல்

## திருமதி நீக்கொலஸ் பிறிசிற்றம்மா (செல்லம்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீக்கொலஸ் பிறிசிற்றம்மா (24-11-2000) அன்று காலமானார்.

இவர் நீக்கொலஸ் (இளைப்பாறிய புகையிரத தலைமைக் காப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், இன்பராணி, யசிந்தா, சறோஜினி, செல்விராணி, அன்ரன் சிறி, யேசுகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகசிங்கம், அல்பிரேட் தேவராஜா, மேரி யஸ்மின் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிசில் இன்பராஜனி, மேர்லீன், சாந்தி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-11-2000) ஞாயிற்றுக் கிழமை மகிந்த மலர்ச் சாலை, கல்கிசையில் நடைபெற்றுப்பூதவுடல்கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அன்ரன்
(மொடேர்ன் ஸ்ரோர்ஸ்)
பஸ் நிலையம்,
நெல்லியடி-கரவெட்டி.

(சி/13983)

# சமுகமளிக்கவும்

## தரம் - 9 மாணவர்கள்

யா/ கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் தரம் 9 இல் கற்ற(2000)மாணவர்கள் வேறு பாடசாலைகளில் தற்காலிகமாகக் கற்றுக் கொண்டிருப்பின் உடனடியாகப் பெற்றோருடன் சமுகமளிக்கவும்.

காலம்: நாளை(27-11-2000)திங்கள் பி.ப.1.30

இடம்: யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.

வி. மாணிக்கம்
அதிபர்.

யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

(13984)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவலிங்கம் கமலாதேவி

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய திருமதி சிவலிங்கம் கமலாதேவி 24—11—2000 பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை—மனோன்மணி தம்பதிகளின் மூத்த மகளும் சிவலிங்கத்தின் அருமை மனைவியும் சிவரூபனின் அன்புத் தாயும் சுலோசனாதேவி (கிளி)-(லண்டன்), காலஞ்சென்ற சுசிலாதேவி (பாப்பா), சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), சிவாஜிபரமேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பொன்ராசா
[மைத்துனர்]

சாத்தாகலட்டி,
அளவெட்டி வடக்கு.

(80900)

## திருமதி இராமையா பரமேஸ்வரி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமையா பரமேஸ்வரி நேற்று (25 - 11 - 2000) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வீரகத்தி இராமையாவின் (சிறைச்சாலை அதிகாரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி இராசு — பாக்கியத்தின் அன்புச் சகோதரியும், மீனாம்பிகை (புத்தளம்), கமலாம்பிகை (ஹொலண்ட்), சுசிலா (புத்தளம், பாத்திமா மகளிர் கல்லூரி ஆசிரியை), மனோகரன் (கணக்காளர், மாலைதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தன் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சற்குணம் (ஹொலண்ட்), றிஸ்வான் (புத்தளம்), வதனா (புத்தளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தி, சுதர்சன், சுகிர்தன், பிரசாத், அருண், பிரியந்தி, நித்தியா ஆகியோரின் பேர்த்தியும், நிதர்சினியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை 5.00 மணிக்கு புத்தளத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
இராசு மகாதேவன்
(பெறாமகன்)

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(80903)

## திருமதி சின்னையா தங்கம்மா

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னையா தங்கம்மா அவர்கள் 20-11-2000 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் நல்லபிள்ளையின் அன்பு மகளும் கந்தையா சின்னையாவின் அன்பு மனைவியும், சிவநேசன் (விசுவமடு), இராசநாயகம் (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்), சறோஜினிதேவி (கனடா), காந்திமலர், செல்வநாயகி (உபதபால் அதிபர், அச்சுவேலி கைத்தொழில்பேட்டை), பத்மாவதி, காலஞ்சென்ற வாமதேவன், கங்காதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணவதி, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம் (கனடா), பாஸ்கரன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோயன், சர்மிலன், சர்மிலா (விசுவமடு), விநோஜா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாசாலை மாணவி), அஞ்சனா, றதிபன் (கனடா), நிறூபன். அநிரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கதிரேசு (கனடா), காலஞ்சென்ற நடராசா (திருகோணமலை), துரைசிங்கம் (நவிண்டில்) ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி, சிவபூரணம் (கனடா), அன்னம்மா (நவிண்டில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26—11—2000) ஞாயிற்றுக்கிழமை சந்தை வீதி, ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் காலை 11.00 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. சின்னையா (கணவன்)

சந்தை வீதி,
ஆவரங்கால்.

(80894)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு

## விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது

மேற்படி திட்டத்தில் வடபகுதியில் இருந்து ஏராளமான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருவதாலும், மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் விண்ணப்ப முடிவுத்திகதி 25/11/2000 இல் இருந்து 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்.
IIS, யாழ்ப்பாணம்.

(C/13986)

**COMPUTER & COMPUTER ACCESSORIES**



COMPUTER PRINTING

பல்கலைக்கழக மாணவர்களின்
DESSERTATION BOOK
COMPUTER மூலம் (தமிழ், ஆங்கிலம்)
பிறின்ட் செய்து தரப்படும்.
நவீன முறையில் அதி உயர்ந்த தரத்தில்
COMPUTER TYPING
செய்து கொள்ள

**SRI MURUGAN COMPUTER SYSTEM**
303, K.K.S. ROAD,
JAFFNA.

(C/13985)

## பல் கட்டுதல், கிளிப் போடுதல்

சீன முறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரால் சிறந்த தரமான சங்குப் பற்கள் அழகிய முறையில் கட்டிக் கொடுக்கப்படும். மற்றும் சிறபபான முறையில் மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும். கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்

## எரிக்கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO: 2486



கிளை
91, கே.கே.எஸ்.றோட்,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.



(C/13963)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபர்
**செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**நயினை ஐயாத்துரை கதிர்காமலிங்கம**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.

(80909)

## இதய அஞ்சலி

உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் கணக்காய்வாளர்
**ச.மயூரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி ச.வள்ளிநாயகி**

அவர்கள் 25-11-2000 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உயர் தொழில்நுட்ப நிறுவன
மாணவர் ஒன்றியம்.

(C/13989)

## கண்ணீர்க் காணிக்கைகள்

யாழ்-உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் H.N.D.A
2ஆம் வருட (பகல்) மாணவன்
**ச. மயூரன்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ச.வள்ளிநாயகி**

அவர்கள் (25.11.2000) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

H.N.D.A (பகல்)
2ஆம் வருட மாணவர்கள்.

(C/13990)

## 'மிக்' விமானம் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம்,நவ.26

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குடாநாட்டு வான்பரப்பில் பிரவேசித்த 'மிக்' விமானம் ஒன்று அரியாலை கிழக்குப் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது. (ம-10-139)

## அனுமதி அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.26

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று விநியோகிக்கப்பட்டதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ம-10)

## பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகின் பரீட்சைகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகின. எதிர்வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதிவரை இந்தப் பரீட்சைகள நடைபெறவுள்ளன. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி 1999/2000 கல்வி ஆண்டு பருவம்-2 மாணவர்களுக்கும் தொழிலாளர் கல்வி டிப்ளோமா பருவம்-1 மாணவர்களுக்குமே இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்த பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை தொழிலாளர் கல்வி அலகுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-6)

## கொடுப்பனவு

தென்மராட்சி,நவ.26

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் நவம்பர் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த வங்கிகளில் கடந்த வியாழன் முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த ஓய்வூதியர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் கடந்த வாரம் கொழும்பிலிருந்து வந்தபோதிலும் அதற்கான கொடுப்பனவுக் காசோலையும் பட்டியல்களும் கடந்த புதன் கிழமை வங்கிகளுக்குக் கிடைத்ததை அடுத்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## பெண் புலிகள் 10பேர் மணலாறில் உயிரிழப்பு

வவுனியா,நவ.26

கடந்த 15ஆம் திகதி மணலாறுப் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்கள் 10 பேர் உயிரிழந்தனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் வெளியிட்டனர்.

அவர்களது விவரம் வருமாறு:-

★ லெப்ரினன்ட் தவநிதி (சுந்தரம் நந்தினி- மட்டக்களப்பு)

★ தர்மினி (எட்வேர்ட் ஜெயக்குமாரி)

★ மைவிழி (மயில்வாகனம் நேசமலர்)

★ செந்தாளினி (கிருஸ்ணபிள்ளை ஜெயமலர்)

★ துவாரகா அல்லது ஒளிவிழி (வெள்ளைக்குட்டி ரஞ்சினி)

★ உதயநிலா (தெய்வநாயகம் ரஞ்சனி)

★ 2 ஆம் லெப்ரினன்ட் லக்ஷிகா (சண்முகம் சுசிலமாலா)

★ 2ஆம் லெப்ரினன்ட் வையந்தி (குலசேகரம்பிள்ளை சாரதா)

★ கப்டன் நிருபா (தம்பிரட்ணம் குமாரி)

★ குருசாமினி (செல்வராசா மங்கையர்க்கரசி)

ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இதேவேளை-

'ஓயாத அலைகள் - 4' நடவடிக்கையில் உயிரிழந்த மேலும் 4 பேரின் பெயர் விவரங்களையும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ கப்டன் தமிழ்க்குரிசில் அல்லது சுபன் (நாகராசா சிவகுமார் - வவுனியா)

★ திகழ் வேந்தன் (குமாரசாமி ஸ்ரீகுகன் - யாழ்ப்பாணம்)

★ அறிவு ( சேதுபதி ரமணன் - மல்லாவி)

★ பாலா (உதயகுமார் உதயரஞ்சினி - யாழ்ப்பாணம்) (இ-7-8)

## மரக்கன்றுகள் இலவசமாக விநியோகம்

யாழ்.றோட்டறிக் கழகமும், சுன்னாகம் றோட்டரக்ட் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மரக்கன்று விநியோக வைபவம் அண்மையில் சுன்னாகம் றோட்டரக்ட் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ.நல்லதம்பி மரக்கன்று விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், யூரோவில் ஸ்தாபனத்தாரும் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கியிருந்தனர் (ஐ-7)

## கண்ணீர் அஞ்சலி

**இராமையா பரமேஸ்வரி**

(சாளம்பை முருகமூர்த்தி ஆலய நிர்வாகசபை உறுப்பினர்)

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் தலைவர் இ.ஆனந்தன் அவர்களின் அன்பு மாமியாரும் கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான இராமையா பரமேஸ்வரி நேற்று(25.11.2000) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புத்தளத்தில் காலமாகிய செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய
பரிபாலன சபையினரும்
இந்து இளைஞர் தொண்டர் சபையினரும்.

(80898)

## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை உப தபால் அதிபர்
**செல்வி சி. செல்வநாயகி**
அவர்களின் தாயார்
**திருமதி சின்னையா தங்கம்மா**

அவர்கள் 20.11.2000 திங்கட்கிழமை காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தபாற் காரியாலயம்,*
*அச்சுவேலி.*

அஞ்சல் அதிபர்,
உதவி அஞ்சல் அதிபர்கள்,
உப அஞ்சல் அதிபர்கள்,
ஊழியர்கள்.

(80899)

# மரண அறிவித்தல்கள்

## பேரம்பலம் சிவகுமாரன் (சிவா)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான பேரம்பலம் சிவகுமாரன் (சிவா) நேற்றுமுன்தினம் (2000.11.24) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார். அன்னார் விஜிதாவின் அன்புக்கணவரும் லக்ஷ்மன், சபீசன், வினிதா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
நா.லோகநாதன்
(துரைராசா - மாமன்)
சரவணை மேற்கு, வேலணை.

*புதிய கொழும்பு ஸ்ரோர்ஸ்,*
*புளியங்கூடல் சந்தி.*

(80908)

## ஐயாத்துரை கதிர்காமலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவை வதிவிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொக்குவிலில் வசித்து வந்தவருமான ஐயாத்துரை கதிர்காமலிங்கம் அவர்கள் நேற்று (25.11.2000) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் அமரர்களான நயினாதீவு சோதிட கலாநிதி சுந்தரர் ஐயாத்துரை - கமலாம்பாள் தம்பதியினரின் புத்திரனும், புங்குடுதீவைச் சேர்ந்த அமரர்களான முத்துவேலு - சிவக்கொழுந்துவின் மருமகனும், காலஞ்சென்ற நாகபூரத்தினம்மா அவர்களின் அன்புக் கணவரும், செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் (பிரதி அதிபா, கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), இந்திராணி லோகநாதன், கலாநிதி சோமசுந்தரேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், றுகுணு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவசாமி லோகநாதன் (S.L.P.), கிருஷ்ணலதா அவர்களின் அன்பு மாமனாரும், பிரீத்தா (வேம்படி மகளிர் பாடசாலை), பிரதீபன் (யாழ் இந்துக் கல்லூரி), கோபிநாத் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஆருத்ரா (சர்வதேச பாடசாலை, கொழும்பு), நிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான நல்லம்மா, அம்பிகாபதி மற்றும் சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன் (முன்னாள் இலங்கை கல்வி நிர்வாக சேவை), சுந்தரலிங்கம் (தபாலகம்-நயினாதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மு.கார்த்திகேசு (பிரபல வர்த்தகர், திருகோணமலை), திருமதி சிவஞானம்மா விசுவலிங்கம் (புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கு.விசுவலிங்கம் (புங்குடுதீவு) அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். தயவு செய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி க.கமலநாயகி (மகள்)
(பிரதி அதிபா,
நாமகள் வித்தியாலயம்,
கொக்குவில்)
செ.சி.லோகநாதன்
(மருமகன் - S.L.P)

*'இந்து மஹால்'*
*புகையிரத நிலைய வீதி,*
*கொக்குவில்.'*

(80912)

## திருமதி சத்தியமூர்த்தி வள்ளிநாயகி

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி வள்ளிநாயகி அவர்கள் நேற்று (25.11.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்.சத்தியமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தப்பு - பாறுபதி ஆகியோரின் அன்பு மகளும் மயூரன் (H.N.D.A.- 2ஆம் வருடம்) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (25.11.2000) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 4.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'நிழல்வாடி',*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
ச.மயூரன்
(மகன்)

(C/13987)

# தொழில்நுட்ப மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு!

யாழ்ப்பாணம்,நவ.26

மந்துவில் பகுதியில் வைத்துக் கடந்த 4 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இ.ஸ்ரீரங்கநாதனை விடுதலை செய்யக் கோரி யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழில்நுட்பக் கல்லூரியின் மாலை நேர வகுப்பு மாணவர்களே நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 8.30 மணி முதல் பகல் 11.15 மணி வரை கல்லூரி முன்றலில் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் மாணவர் மன்றப் பிரதிநிதிகள் யாழ்.செயலகத்திற்குச் சென்று கைது செய்யப்பட்ட மாணவனை விடுவிக்கக் கோரும் மகஜர் ஒன்றை யாழ்.அரச அதிபர் கே.சண்முகநாதனிடம் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்டு மாணவர் பிரதிநிதிகளிடம் பேசிய அரச அதிபர் - மேற்படி விடயம் தொடர்பாக பலாலியில் உள்ள இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதாகத் தெரிவித்தார்.

இதேவேளை -

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். திறந்த பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

பிரஸ்தாப மாணவன் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவை வழங்கப் போவதாக உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியமும் அறிவித்துள்ளது.

(ம-10-15-139-69)

---

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்துவார் என்றும் -

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் பிரிட்டன், ஜேர்மன் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலும் மாவீரர்தினத்தை ஒட்டிய விசேட நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதே வேளை-

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் மாவீரர் தினத்தைக் குறிக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

## லங்கா முடித்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் சேவை நடைபெறும் தினமான நாளைமறுதினம் காலையிலும் பயணச்சீட்டுக்கள் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு தினங்களும் பயணச்சீட்டு பெற வருவோர் முதலில் யாழ்.ரயில் நிலையப் பகுதிக்கே வருகை தர வேண்டும் என்றும் -

அங்கிருந்து அவர்கள் தொகுதி தொகுதியாக சிங்கள மகாவித்தியாலயப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்தே பயணப்பதிவு மற்றும் பயணச்சீட்டு விநியோகம் என்பன நடைபெறும் என்றும் 'றான்' அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ஜ)

---

## தொண்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுக்களில் வடக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன் மற்றும் வடக்கு கிழக்கில் யாழ் மாவட்டம் - தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே இந்த ஆண்டு நிரந்தர நியமனம் வழங்குவதாக அரசு உறுதி அளித்த தொண்டர் ஆசிரியர் எண்ணிக்கையில் இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படாது உள்ள 750 பேருக்கான நிரந்தர நியமனங்களும் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளன.

(ம-7)

## 10ஆயிரம்....

வித்தார். விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த 46 பேர் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாக கொழும்புப் பகுதிக்கான பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஜ-7)

---

## இயல்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

"ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக- அவர்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதற்காக - தனித்து நின்று விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தனித்துவமான தலைவர் பிரபாகரன். ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் குரலாக ஒலித்த தலைவர் பிரபாகரன், ஏனைய நாடுகளின் தலைவர்கள் போன்று மதிக்கப்பட வேண்டியவர்"- என்றும் தமிழ்ச்செல்வன் தனது பேட்டியில் தெரிவித்திருக்கின்றார்.

தற்போதைய அரசியல்நிலைமை குறித்து விடுக்கப்பட்ட பத்துக்கும் அதிகமான கேள்விகளுக்கு இப் பேட்டியில் அவர் விரிவாகப் பதில் அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. "எமது மக்களின் வாழ்க்கை நிலையை சுமுகமான நிலைக்குக் கொண்டு வராமல், ஒருபுறம் கொடூர யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் அரசுடன் மறுபுறத்தில் சமாதானமாக இருந்து பேசுவது எப்படி?" - என்ற சாரப்பட அவர் கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

(உ-ம)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறையாகச் செயற்பட்டு வரும் நோர்வேக்குப் பலம் சேர்க்கும் வகையில் அமெரிக்கா, பிரிட்டன்,இந்தியா ஆகியன ஓரணியில் செயற்பட முயன்று வருவதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஜ-20)

---

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### ஹாட்லி

இரத்தினசிங்கம் சுதாகர், ஜெகந்தன் வாசுதேவன்,கணபதிப்பிள்ளை குமணன், மகாலிங்கம் பிரதீபன், சிவஞானசுந்தரம் றமணன் (ஐவருக்கும் 3A) சிவபாலன் பகீரதன், நடராசா பவானந்தன், பாலேந்திரம் சங்கர், (மூவருக்கும் 3A B), குணரட்ணம் பாலகுமார் (3A C)

### யாழ்.இந்து

அம்பலவாணர் கிரிதரன் (4A), யோகநாதன் தினேஷ்காந்த், விநாயகமூர்த்தி துஷ்யந்தன், புவனேந்திரன் நிதர்சன், விஸ்வலிங்கம் கிருபாகரன் (நால்வருக்கும் 3A), தியாகராஜ ஆதவன், மெற்றாஸ்மெயில் ரேகட (இருவருக்கும் 3A C)

### யாழ்.இந்து மகளிர்

வேலாயுதபிள்ளை நிரஞ்சனா (4A), கனகராஜா ஜெயந்தினி, சிவசர்மா சைலஜா (இருவருக்கும் 3A B) நடராஜா சிவானி, திருஞானம் சத்தியவாணி (இருவருக்கும் 3A)

### வேம்படி மகளிர்

குலவீரசிங்கம் வாணிஸ்ரீ, கணேசலிங்கம் பிரதீபா (இருவருக்கும் 3A C), விநாயகமூர்த்தி விஜிந்தினி, சந்திரராஜா சிவனுஷா (இருவருக்கும் 3A)

### கொக்குவில் இந்து

சித்திராவதி இராமகிருஸ்ணன், சசீகரன் கமலசிங்கம் (இருவருக்கும் 3A C), பவதாரிணி யோகலிங்கம், சின்னத்துரை சிவரூபன் (இருவருக்கும் 3A)

### சென்.ஜோன்ஸ்

மருதவாணர் ரமணன், (3A B), துரைரட்ணம் ஆதவன் (3A C) பாலகிருஷ்ணன் தனுஷன், திரிலோகேஸ்வரன் துவாரகன் (இருவருக்கும் 3A)

### விக்னேஸ்வரா

தர்மகுலசிங்கம் பார்த்தீபன் (3A C), பாலசுப்பிரமணியம் வாசவன், செபஸ்ரியன் குலரட்ணம் றோய் நிதாசன், அம்பலவாணர் அனுராசா (மூவருக்கும் 3A)

### வடமராட்சி இந்து மகளிர்

கந்தசாமி பிரதீபா (3A C), ஐயாத்துரை ஜெயந்தினி, அரியரட்ணம் நளாயினி (இருவருக்கும் 3A)

### வசாவிளான் ம.வி

பாலசுப்பிரமணியம் யசோதா (3A C), சர்வானந்தம் சர்வராசா, சற்குணசர்மா சுகந்தி(இருவருக்கும்3A)

### யூனியன்

சற்குணசிங்கம் நிஷாந்தினி, செல்வராசாதீபன்(இருவருக்கும்3AC)

### பருத்தித்துறை மெதடிஸ்

வேல்முருகு வாசுகி (4A), கமலசேகரம் நிருஷா (3A)

### மத்திய கல்லூரி

திருநாவுக்கரசு தயாபரன், மரியதாஸ் யூட் (இருவருக்கும் 3A)

### மல்லாகம் ம.ம.வி

ராசேந்திரன் மஞ்சுளா (3A)

### சாவகச்சேரி இந்து

சிதம்பரப்பிள்ளை யசோதரன்(3A)

### மானிப்பாய் மெமோறியல்

குணம் சசிகுமார் (3A)

### யாழ்ப்பாணக் கல்லூரி

தேவராஜா துஷ்யந்தன் (3A)

### உடுவில் மகளிர்

தியாகராசா சுபோஜினி (3A C)

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்

சிவபாதசுந்தரம் ஜெயராஜன் (3A)

### சண்டிலிப்பாய் இந்து

வரதராஜா விஜிதா (3A B)

முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது பொதுவாகக் குடாநாட்டில் இம்முறை பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்திருப்பதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் சில அபிப்பிராயம் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் அநேகமாக இவ்வார முற்பகுதியில் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் அஞ்சல் செய்வதற்கு இன்னும் தயாராகவில்லை என்றும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

"விளக்கியதை விளக்குகிறேன் மீண்டும் விளக்குகிறேன்"

கணக்கீடு

திரு.பாலவாசன்

B.B.A (F.M.Spl.)

A/L 2001 DAY CLASS

கட்டுப்பாட்டுக் கணக்கு

ஆரம்பம்: 27.11.2K => 11.00 a.m.

(வாரத்தில் 12 மணித்தியால வகுப்புகள்)

BEACON

(வெலிங்டன் சந்தி அருகில்)

(80890)

வெகுமதி ரூபா 10,000/-

EBK 2000 SRI RAM HONDA GENERATOR (இல. 8166966) களவாடப்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் தருபவர்களுக்கு அல்லது கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு வெகுமதி ரூபா 10,000 வழங்கப்படும்.

M. அருளப்பு,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

(80781)

DCS இன்

2001 / 2002 கல்வியாண்டுக்குரிய கணனிக் கற்கைநெறிக்கான

5000 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

இலங்கையில் நன்கு அறிமுகமாகி யாவருக்கும் கணனிக்கல்வி என்ற இலக்குடன் 10வது வருடத்தை நோக்கி முன்னேறும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகிய எமது நிறுவனம், யாழ். மாவட்டத்தில் கணனித்தொழில்நுட்பத்தை பல்வேறு மட்டங்களில் முன்னேற்றுவதற்கு சிறப்பாக வழிகாட்டுவதோடு, தொடர்ந்தும் நவீன கணனி வளர்ச்சிப் போக்குகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்நிற்கின்றது.

அந்த வகையில் 2001/2002 கல்வியாண்டுக்கு 5000 மாணவர்களை இலவச/ சலுகை அடிப்படையில் கணனிக் கற்கை நெறிகளுக்கு சேர்த்துக்கொள்ள எமது நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இம் முடிவுக்கமைய தொடரும் எமது கணனிச் சேவையில் பின்வரும் கற்கை நெறிகளை இக்கல்வியாண்டுக்காக அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

- Diploma in Office Management (6 Months)
- Desktop Publishing & Presentation Graphics / DTP (9 Months)
- Computerized Financial Accounting (9 Months)
- National Diploma in Applied Computing / NDAC (1 Year)

மேற்படி கற்கைநெறிகளுக்கு 15 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி கற்கைநெறிகளுக்கான நுழைவுத்தேர்வு போட்டிப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் 5000 மாணவர்கள் இலவச / சலுகை அடிப்படையில் கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இக்கற்கை நெறிகளுக்கு இரட்டைச் சான்றிதழ்

1) DCS கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் Diploma சான்றிதழ்

2) இலங்கை மற்றும் இந்திய அரசாங்கத்தினால் நடத்தப்படும் பரீட்சையிலிருந்து பெறப்படும் சான்றிதழ்

கற்கை நெறிகள் நடைபெறும் நிலையங்கள்

1) யாழ்ப்பாணம் 2) வடமராட்சி

நுழைவுத்தேர்வு போட்டிப்பரீட்சை

1) பொதுஅறிவு 2) நுண்ணறிவு (I.Q)

விண்ணப்பப்படிவம்

*விண்ணப்பப்படிவங்களை எமது யாழ்ப்பாண, வடமராட்சிக் கிளைகளில் அல்லது அருகில் உள்ள பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.*

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை ரூபா 100/= பரீட்சைக்கட்டணத்துடன் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது ரூபா 100/= காசுக்கட்டளை Director, DCS என்றும் பணம் பெறும் நிலையம் Colombo GPO எனவும் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கு

பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு இலவச நுழைவுத்தேர்வுப் போட்டிப்பரீட்சை நடத்தப்படும்.

➢ கற்கை நெறிகள் யாவும் மாணவர்களின் வசதிகருதி மூன்று பிரிவுகளாக *January 2001, April 2001, September 2001* ஆரம்பமாகும்.

மேலும் இப்பிரிவுகள் யாவும் வார, வார இறுதி நாள்களில் காலை மாலை வகுப்புகளாக நடைபெறும்.

Centre for Advanced Computing & Information Technology

DCS

COLLEGE OF COMPUTER TECHNOLOGY

(British ACP Recognised Training Centre)

T. P : 021-2596 e - mail : dcsjaf@sltnet.lk P.O Box No: 144 - Jaffna

124/2, Palaly Road, Thirunelvely. N.M.M.V Road, Nelliady.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.